# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,929—1970 ඔක්තෝබර් 23 වැනි සිකුරාදා—1970.10.23

14,929 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு ஒற்ரேுபர் மாதம் 23 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேருக கோவை செய்யக்கூடியதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 959 | ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | 975 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 975 | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | — | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் .. .. | 980 | நானாவித அறிவித்தல்கள் .. .. .. | — |


## பதவிகள் — வெற்றிடம்

### " இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள் "

*1. படிகள்.*—வேறுவிதமாகச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்கு விதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.

*2. சேவைக்குரிய நிபந்தனைகள்.*—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கருமமுறைக் கைந்நூலின் ஒழுங்கு விதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.

*3. நியமன விதிகள்.*—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள் வீதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழிந்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்தவேண்டும். அவர்கள் விரும்பினுல் மேலும் 5 சத விதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத விதத்தையோ அத்தோடு மேலும் 5 சத விதத்தையோ செலுத்தினுலும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத விதத்தை ஒவ்வொரு நிதியாண்டு முடிவினும் குறித்த நிதிக்கு அரசாங்கம் அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.

(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்தவேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.

(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாத அச்சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்தீவிபத்தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.

*4. அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்.*—(i) சந்தர்ப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவிகளுக்கு ' நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் ' தகுதிகாண்/சோதனைக் காலம் எப்பதவி சம்பந்தமாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றுண்டாகும்.

(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இல. அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவார் என்னும் நிபந்தனைக்குட்படல் வேண்டும்.

(iii) (அ) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.

(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் பிறவற்றுடன் க. ப. த. ப. கட்டத்துக்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சிச் சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேற

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

*அரசாங்க அழுத்தகர் திணைக்களம்,*
*கொழும்பு,*
*1970 ம் ஆண் யூன் மீ 2 ந் உ.*

*எல். டபின்யூ. பீ. பீரிஸ்,*
*அரசாங்க அழுத்தகர்.*

வதைப் பொறுத்து அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர். விதித்துள்ள காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள், அவர்களின் தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.

குறிப்பு.—சிங்கள மொழிமூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிப்படுத்தற்கு ஒரு முன் தேவையாக இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்கப் பெறுவர்.

5. வேண்டிய தகைமைகள்.—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாகவிருப்பவராகும்.

6. யுத்தசேவைச் சலுகை.—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின், மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், தியணைக்கும் படை, விமானத் தாக்கப் பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்புப் படை என்பன வற்றிலும் (தாமாகவே இப்படைகளை விட்டு விலகியவர்களை ஒழிந்த) முழுநேர கடமையாற்றியவர்களும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிவரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ஆம் திகதிக்கு முன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.

7. பிற தேவைகள்.—(i) தகைமையுடைய அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும் தான் விண்ணப்பம் அனுப்பிய தேதியை, இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில் ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அரசாங்க சேவைக் ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றே அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்களை அனுப்பும்போது, நடைமுறைக் கைந் நூலின் 109 நிருவாக பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்றோ வெனவுங் கூறல் வேண்டும்.

(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்கவேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இதுவிடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.

(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப் பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனால் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆதரவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கி விடும்.

(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டு பிடிக்கப்படின், அப் பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாக்கி விடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.

(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8. தகுதிக்கான சம்பளத்தின் வரையறை.—தகுதிக்கான சம்பளம் என்பது நிலையின் அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியவை சம்பளத்துடன் அடங்காது.

---

A B 40/X2288/70

## கல்வி அமைச்சு

### பதவி—வர்த்தக விரிவுரையாளர், I ந் தர பதவிக்கு அல்லது இப்பதவிப் பயிற்சிக்கான புலமைப் பரிசில் அளித்தல்

கல்வி அமைச்சின் கீழுள்ள இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியில் வர்த்தக விரிவுரையாளர், I ந் தர பதவிக்கு அல்லது இப்பதவிப் பயிற்சிக்கான புலமைப் பரிசில் அளித்தற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள், இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பெற்று, "செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, த. பெ. இல. 500, கொழும்பு 1" என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள் 1970–11–7.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள்—1970–11–14.

குறிப்புகள்—(i) அச்சிட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9″ × 4″ அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையை தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும். மேலும், அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லவரா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதிவரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக் கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக் கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு இலங்கை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு, அனுப்பலாம்.

(iv) மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல்நலம் உடையவர்களாகவிருக்கின்றார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு கேட்கப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.—இப்பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளம் பெறுதற்கு உரித்துடையதுமாகும். தெரிவு செய்யப்படுபவர் கைம்பெண், அனாதை இளைப்பாற்றுச் சம்பளத்துக்கு கட்டணம் செலுத்த வேண்டும். நியமதாரி முதற்கண் 3 வருடகாலத்திற்கு தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவர்.

3. சம்பளமும் ஏனைய படிகளும்.—இப்பதவிக்குரிய ஒன்றுதிரட்டிய சம்பள அளவுத் திட்டம் வருமாறு :—

ரூ. 11,520—10 × 480—16,320 வருடாந்தம்.

(ரூ. 14,880 பெறமுன் வினைத்திறமைகாண் தடை உண்டு)

குறிப்பு.—5 ஆம் பந்திக்கமைய பயிற்சியாளர் ஒருவர் தெரிவு செய்யப்படுமிடத்து அவருடைய சம்பளம் அல்லது சகாயப்படி திறைசேரியுடன் கலந்தாலோசித்து தீர்மானிக்கப்படும்.

4. தேவைப்படும் தகைமைகள்.—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகள் உடையவர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்ட வேண்டும் :—

(அ) சிறந்த நல்லொழுக்கமும் உடல் நலமும் உடையவராய் இருக்க வேண்டும்.

(ஆ) 1970–11–7 ந் திகதியன்று 30 வயதுக்குக் குறையாதவராயும் 45 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அரசினர் சேவையில் ஏற்கனவே உள்ளவர்களுக்கு அமையாது.

(இ) (i) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தால் வர்த்தகத்தில் அல்லது பொருளியலில் அல்லது தொழில் நிருவாகத்தில் வழங்கப்படும் I ஆம் அல்லது II ஆம் வகுப்புச் சிறப்புப்பட்டம்.

(ii) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் வர்த்தக முதுமாணி அல்லது விஞ்ஞான முதுமாணிப் (பொருளியல்) அல்லது கலை முதுமாணி (பொருளியல்) பட்டம் அல்லது சமமான அல்லது உயர்ந்த தகைமைகள் பெற்றிருக்க வேண்டும்.

(ஈ) ஆசிரியர் கலாசாலை அல்லது சிரேட்ட தொழில்நுட்ப நிலையம் அல்லது இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி போன்ற அங்கீகரிக்கப்பட்ட நிலையம் ஒன்றில் அல்லது அங்கிகரிக்கப்பட்ட சமமான அல்லது உயர்ந்த நிலையம் ஒன்றில் 5 வருடப் படிப்பித்தல் அல்லது செயல்முறை அனுபவம் அல்லது 5 வருட படிப்பித்தல் அனுபவமும் செயல்முறை அனுபவமும் பெற்றிருக்க வேண்டும்.

(உ) சிங்களத்தில் படிப்பிக்கக்கூடியவராய் இருக்க வேண்டும். அல்லது நியமனத் திகதியிலிருந்து 3 வருட காலத்துக்குள் சிங்களத் தேர்ச்சி பெறவேண்டும்.

5. **பயிற்சிக்கான புலமைப் பரிசில் அளித்தல் தொடர்பில் அமையும் விதிகளும் நிபந்தனைகளும்.**—(i) மேற்படி 4 ம் பந்தியில் கொடுபட்டுள்ள தகைமையுடையவர்கள் எவர்களிடமிருந்தாவது விண்ணப்பங்கள் வராவிடின், இப்பதவிக்கு தகுதியான விண்ணப்பதாரிகள் எவராவது இல்லாவிடின் பயிற்சியாளராக நியமனம் பெறுவதற்கு பின்வரும் தகைமையுடையவர்களிடமிருந்து வரும் விண்ணப்பங்கள் சீர்தூக்கப் படும் :—

(அ) **வயது** : 1970–11–7 அன்று 28 வயதுக்குக் குறையாதவராயும் 40 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். (வயதெல்லை சகலருக்கும் ஏற்புடையதாகும்).

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தால் வர்த்தகத்தில் அல்லது பொருளியலில் அல்லது தொழில் நிருவாகத்தில் வழங்கப்படும் I ஆம் அல்லது II ஆம் வகுப்புச் சிறப்புப் பட்டம்.

(இ) ஆசிரியர் கலாசாலை அல்லது சிரேட்ட தொழில்நுட்ப நிலையம் அல்லது இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி போன்ற அங்கீகரிக்கப்பட்ட நிலையம் ஒன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட சமமான அல்லது உயர்ந்த நிலையம் ஒன்றில் 5 வருடம் படிப்பித்தல் அல்லது செயல்முறை அனுபவம் அல்லது 5 வருடம் படிப்பித்தல் அனுபவமும் செயல்முறை அனுபவமும் பெற்றிருக்க வேண்டும்.

(ii) சிறந்த நல்லொழுக்கமும் உடல் நலமும் உடையவராய் இருக்க வேண்டும்.

(iii) தெரிவு செய்யப்படுபவர் வெளி தேசத்தில் பயிற்சி பெறும்படி வேண்டப்படலாம். பயிற்சிக் காலத்தில் தகுதியான சகாயப்பணமளிக்கப் படும்.

(iv) தெரிவு செய்யப்பட்டவர் வெளி தேசத்தில் பயிற்சி பெற நேரிடின், அவர் இலங்கை அரசாங்கத்துடன் ஓர் உடன்படிக்கை செய்துகொள்ளவேண்டும் :—

செய்வதாக உறுதிப்படுத்தும் பிறவற்றுள், குறித்த பயிற்சியை நம்பிக்கையுடனும் கெட்டித்தனமாகவும் செய்து, திருப்திகரமாகப் பயிற்சியை முடித்து, அதன் பின்னர் இலங்கை அரசாங்கம் விரும்பின் (அரசாங்கம் தீர்மானிக்கும்) குறித்த ஒரு காலத்துக்கு அதன் சேவையிலீடுபடுவதாகவும்,

உடன்படிக்கையின் விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைவாக நடக்கத் தவறின் இலங்கை அரசாங்கத்துக்கு, இப்பயிற்சி முழுவதற்குமாக இலங்கை அரசாங்கத்தால் அல்லது புலமைப்பரிசில் வழங்கும் ஸ்தாபனத்தினுல் அல்லது இரண்டினுலும் செலவழிக்கப்பட்ட சகல செலவினங்களையும் (உதாரணமாக சம்பளம், சகாயப்பணங்கள், பிரயாணச் செலவு, பிற செலவுகள் ஆதியன) திருப்பிக் கொடுப்பதாக உறுதிப்படுத்துவதாகவும் உடன்படிக்கை செய்தல் வேண்டும்.

(v) தெரிவு செய்யப்படும் அபேட்சகர் வர்த்தக முதுமாணி அல்லது விஞ்ஞான முதுமாணி (பொருளியல்) அல்லது கலை முதுமாணி (பொருளியல்) பட்டம் அல்லது சமமான அல்லது உயர்ந்த தகைமைகள் பெறவேண்டும்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றையும் காட்டுமாறு கேட்கும்பொழுது, சமர்ப்பித்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ். (**முக்கிய குறிப்பு.**—சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது) ;

(ஆ) பல்கலைக் கழகப் பட்ட அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ்கள் ;

(இ) குணச்சான்றிதழ் இரண்டு ; இவற்றிலொன்று பாடப்பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாயிருத்தல் வேண்டும் ;

(ஈ) உயர் தொழிற்றகைமையும் தொழினுட்பத் தகைமையும்/உயர் தொழிற்றகைமை அல்லது தொழினுட்பத் தகைமை பற்றிய சான்றிதழ் ;

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றிற் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

குறிப்பு.—(i) சாதனங்களையாயினும், சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கக்கூடாது.

(ii) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும் பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையினுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" ஆ " எனக் குறியிடப்பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையினுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவறறைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" அ " எனக் குறியிடப்பட்டுள்ளது), அதன் கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பதாரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைகளுக்குள் விண்ணப்பம் பெற்றமைபற்றிய அறிவித்தலைப் பெருவிடின், உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

எஸ். பி. நாணயக்கார,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகார சபை.

அரசாங்க சேவை அதிகார சபை அலுவலகம்,
த. பெ. இல. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1,
1970 ம் ஆண்டு ஒக்டோபர் மீ 16 ந் உ.

10–842/1—23.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,929

---

No. AB 80/X. 2289/70

## ஆயுள்வேத திணைக்களம்

### மருத்துவ அத்தியட்சர் பதவி (தரம் I)
### ஆயுள்வேத மத்திய வைத்தியசாலை

ஆயுள்வேத திணைக்களத்தின் ஆயுள்வேத மத்திய வைத்தியசாலை (தரம் I) மருத்துவ அத்தியட்சர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் இந்த அலுவலகத்தினுல் அளிக்கப்படும் அச்சிட்ட படிவங்களில் செய்யப்பெற்று, செயலாளர், அரசாங்க சேவை ஆணைக்குழு, த. பெ. இலக்கம் 500, கொழும்பு–1 என்ற முகவரியில் பின்வரும் திகதிகளில் அல்லது அதற்கு முன்னதாகவோ கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

(அ) உள்ளூர் விண்ணப்பங்கள் 1970–11–7.

(ஆ) வெளியூர் விண்ணப்பங்கள் 1970–11–14.

குறிப்பு.— (i) அச்சிட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் முகவரி இடப்பட்டதும் 9" × 4" அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான உறை ஒன்றினை தமது கடிதத்துடன் அனுப்புவதோடு, அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவை உத்தியோகத்தவரா அல்லாதவரா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதிக்கப்பட்டது எனக்கூறப்படும் குற்றச்சாட்டுகள் எதுவும் கவனிக்கப்படமாட்டாது. தங்கள் விண்ணப்பங்களை இறுதி நாட்கள் வரை தாமதிக்கும் அபேட்சகர்கள் அதனுலேற்படும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களை பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம். அபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை குறித்த காலத்திற்குள் அவர்கள் வசிக்கும் நாட்டிற்குரிய அல்லது அந்நாட்டிற்கு மிக அருகிலுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு அனுப்பிவைக்கலாம்.

(iv) **மருத்துவச் சோதனையும், பயணச் செலவும்.**—இலங்கை அரசாங்கத்தின்கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டில் தெரிவுசெய்யப்பட்ட இலங்கையரான உத்தியோகத்தர்கள் சேவைக்குத் தகுதியான உடல்நலமுடையவர்களா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன்பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவத் தொழில் செய்பவர்களிடம் செல்லுமாறு வேண்டப்படுகின்றனர். அத்தகைய சோதனைக்காகிய கட்டணமும் இலங்கைக்குப் பயணமாவதற்குரிய செலவும் அவ்வுத்தியோகத்தர்களாலேயே கொடுக்கப்படல் வேண்டும்.

2. (i) **நியமன நியதிகளும், சேவை நிபந்தனைகளும்.**—இப்பதவி நிரந்தரமானதும் உபகாரச் சம்பள உரித்துடையதுமாகும். விதவைகள், அநாதைகள் உபகாரச் சம்பளத்திட்டத்திற்கு உதவுத்தொகை செலுத்தப்படல் வேண்டும்.

(ii) தெரிவுசெய்யப்பட்ட அபேட்சகர் சொந்த மருத்துவச் சேவையில் ஈடுபடும் உரித்துடையராகார்.

(iii) சேவையில் உறுதிப்படுத்தப்படுமுன்னர் தெரிவுசெய்யப்பட்ட அபேட்சகர், நிதிப்பிரமாணங்கள், நிருவாகப் பிரமாணங்கள், அரசாங்க சேவை ஆணைக்குழு நியதிகளுக்கும், பிரமாணங்களுக்கும், சிங்களம்/தமிழ் ஆகியவற்றில் திணைக்களப் பரீட்சையொன்றில் சித்திபெறல் வேண்டும். ஆயுள்வேத திணைக்கள மருத்துவ உத்தியோகத்தர்களுக்கான (பொதுத் தரம்) பரீட்சையும் இதுவே.

இப்பரீட்சையில் சித்திபெறத் தவறுமிடத்து 120, 121 ஆம் நிருவாகப் பிரமாணங்கள் ஏற்புடையனவாகும்.

3. **சம்பளமும், படிகளும்.**—இப்பதவிக்கான திரட்டிய சம்பள அளவுத்திட்டம் பின்வருமாறு : 11,040—10 × 480 ரூபாவும் 3,600—17,640 ரூபாவும். 14,480 ரூபாவுக்கு முன்னர் வினைத்திறமைகாண் தடையுண்டு. 14,880 ரூபாவுக்கு முன்னரமையும் வினைத்திறமைகாண் தடை, வேலை நடத்தை ஆகியவைபற்றிய திணைக்களத் தலைவரிடமிருந்து பெற்ற அத்தாட்சிப் பத்திரமொன்றை உள்ளடக்குவதாக அமையும்.

4. **தேவைப்படும் தகைமைகள்.**— ஒவ்வொரு அபேட்சகரும், தான்—

(அ) சிறந்த நன்னடத்தையும், தேகாரோக்கியமும் உடையவரென்றும்;

(ஆ) 71.1.1970 இல் 35 வயதுக்குக் குறையாதவரென்றும் 50 வயதுக்குக் கூடியவரல்ல என்றும், (ஏற்கனவே அரசாங்க சேவையில் அமர்ந்தோருக்கு வயதுக்கட்டுப்பாடு கிடையாது) ;

(இ) அங்கீகரிக்கப்பட்ட ஆயுள்வேதக் கல்லூரியொன்றின் டிப்ளோமாவுடையவரென்றும் ;

(ஈ) அரசாங்க ஆயுள்வேத வைத்திய நிலையமொன்றில் வைத்தியராக 10 வருட அனுபவமுடையவரென்றும் ;

(உ) ஆயுள்வேதத்தில் பட்டத்திற்குப்பின் பெறும் தகைமையுடையவர் அல்லது ஆயுள்வேதத்தில் ஆரம்ப ஆராய்ச்சி செய்து புகழ்பெற்றவர் அல்லது ஆயுள்வேதத்தில் பல வெளியீடுகள் செய்து சிறப்புப் பெற்றவர் என்றும் ;

(ஊ) குறைந்தது இருவருட நிருவாக அனுபவமுடையவரென்றும், திருப்திகரமான சான்றளித்தல் வேண்டும்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றினையும் கேட்கப்படும்பொழுது சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) பிறப்பு பதிவுச் சான்றிதழ் (மு. கு.—சமயதீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடைபெறும் பாடசாலைக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது) ;

(ஆ) மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ் ;

(இ) குணச்சான்றிதழ்கள் இரண்டு. இவற்றிலொன்று பாடப்பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர், அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாயிருத்தல் வேண்டும் ;

(ஈ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்திபெற்ற மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

குறிப்பு.— (i) சாதனங்கள் அல்லது சாதனங்களின் பிரதிகள் எவற்றையும் விண்ணப்பத்துடன் இணைத்தல் கூடாது.

(ii) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத்தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் தங்கள் விண்ணப்பங்களை திணைக்களத் தலைவர்களூடாக அனுப்புதல் வேண்டும். எனினும், அவர்கள் தாங்கள் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அவ்வறிவித்தல் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் (" ஆ " எனக் குறிப்பிடப்பட்ட) அஞ்சலட்டையை இதன்பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களும் அவை சம்பந்தமான வேறு தொடர்புகளும் செயலாளர், அரசாங்கசேவை ஆணைக்குழு என முகவரியிடப்பட்டு அனுப்பப்பட வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தர்களுக்கும் தனிப்பட்ட முறையில் அனுப்பக்கூடாது.

8. இந்த வர்த்தமானியின் ஆரம்பத்தில் I ஆம் பகுதி, II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியதிகளுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளைப் பார்வையிடுமாறு வேண்டப்படுகின்றனர்.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சலட்டையை (" அ " எனக் குறிப்பிடப்பட்ட) அதன்கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பி திருப்பி அனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்களின் விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கிடைத்தமைபற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கமைய ஒழுகுபவர் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத்தவறும் விண்ணப்பகாரர் தமது விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதும் உடையராகார்.

எஸ். பி. நாணயக்கார,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்கு.

அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலகம்,
த. பெ. இலக்கம். 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1,
1970 ம் ஆண்டு ஒக்ரோபர் மீ 16 ந் உ.

10–842/2—23.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,929

---

No. : AB.100/X2290/70

## கமத்தொழிற்றிணைக்களம்

### உரிவையுந்தோலும் விருத்தியாக்க உத்தியோகத்தர் பதவி

கமத்தொழில் திணைக்களத்திலுள்ள உரிவையுந்தோலும் விருத்தியாக்க உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள், இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பெற்று, செயலாளர், அரசாங்க சேவை அதிகாரசபை, அ. பெ. இல. 500, கொழும்பு 1, என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அவற்றிற்குமுன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள், 1970.11.7.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள், 1970.11.14.

குறிப்பு :

(1) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9″ × 4″ அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையை தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும். மேலும், அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(2) விண்ணப்பப் படிவம், அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதி வரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(3) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிற நாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக்கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினல் விண்ணப்பப் படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக் கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு இலங்கை அரசாங்க சேவை அதிகாரசபையின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு, அனுப்பலாம்.

(4) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.**—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல் நலமுடையவர்களாயிருக்கிறார்களாவென்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு வேண்டப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்கு பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—இப்பதவி நிலையானதும் இளைப்பாற்றிச் சம்பள உரிமை உடையதுமாகும். இந்நியமனம் முதற்கண் மூவாண்டுகள் தகுதிகாண் நிலையில் அமையும்.

3. **சம்பளமும் படிகளும்.**—இப்பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம் வருமாறு திரட்டிய சம்பளம்—ஆண்டொன்றுக்கு ரூபா 7,800 ல் இருந்து ஆண்டொன்றுக்கு ரூபா 16,320 வரை ரூபா 360 ஆன 9 வருடாந்த ஏற்றங்களாலும் ரூபா 480 ஆன 11 வருடாந்த ஏற்றங்களாலும் உயரும். 11,040 ரூபாவுக்கு முன் தகுதிகாண் தடையுமுண்டு. 1.10.69 க்குமுன் இருந்த தொடர்பான அடிப்படைச் சம்பள அளவுத்திட்டம் ரூபா 5160— 9×360, 10×480—ரூபா 13,200.

4. **தேவையான தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகளையுடையர் என்பதற்குத் திருத்தியான சான்று காட்டுதல் வேண்டும்.

(அ) அபேட்சகர் சிறந்த நற்குணமுடையவராயும் உடல் நலமுடையவராயுமிருத்தல் வேண்டும்.

(ஆ) 1970.11.7 ல் 30 வயதுக்குக்குறையாமையும் 40 வயதுக்கு மேற்படாமையும் (ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ளோரின் விடயத்தில் இவ்வயதெல்லைகள் கவனிக்கப்படா)

(இ) (1) 1956 ஆம் ஆண்டின் சட்டம் இல. 46 ன் மிருகவைத்தியர், தொழில் புரிவோர் சம்பந்தமான பட்டோலையிலுள்ள தராதரங்களில் ஒன்றோ பலவோ உள்ளமையும்.

(2) 1958 ஆம் ஆண்டின் 29 ம் இலக்க விலங்குச் சட்டத்தினை செயற்படுத்தலிலே குறைந்தபட்சம் 5 ஆண்டுகளாயினும் அனுபவம் உள்ளமையும்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றினையும் காட்டுமாறு கேட்கும்பொழுது, சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ். (**முக்கிய குறிப்பு.**—சமயதீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது).

(ஆ) பல்கலைக்கழகப் பட்ட அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ்.

(இ) குணச்சான்றிதழ் இரண்டு, இவற்றிலொன்று பாடப்பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாயிருத்தல் வேண்டும்.

(ஈ) உயர் தொழிற்றகைமையும் தொழினுட்பத் தகைமையும்/ உயர் தொழிற்றகைமை அல்லது தொழினுட்பத் தகைமை பற்றிய சான்றிதழ் ;

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றிற் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

**குறிப்பு :**

(1) சாதனங்களையாயினும், சாதனங்களின் படிகளையாகினும் விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கக்கூடாது ;

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும், அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள்ள) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகாரசபை, என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம், II ம் பிரிவில் வெளியிடப்பட்டுள, அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டை ("அ" எனக் குறியிடப்பட்டுள்ளது), அதன் கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமைபற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமைபற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

எஸ். பி. நாணயக்கார,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகாரசபை.

அரசாங்க சேவை அதிகாரசபை அலுவலகம்,
அ. பெ. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1,
1970 ம் ஆண்டு ஒக்ரோபர் மீ 16 ந் வ.

10–842/3—23.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,929

---

## இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரி கட்டுபத்த, மொறட்டுவ

### குடிசார் எந்திரவியல் பேயதனுசிரியர் பதவி, தரம் II

மொறட்டுவ, கட்டுபத்த இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியில் குடிசார் எந்திரவியல், தரம் II போதனுசிரியர் பதவிக்கான விண்ணப்பங்கள் கீழ்க்காணும் தகைமையுடையவர்களிடமிருந்து கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் கீழ்த் தரப்படும் மாதிரி விண்ணப்பப் பத்திரத்தில் 1970 நவம்பர் பத்தாம் தேதியோ, அதற்கு முன்னரோ கிடைக்கக் கூடியவாறு, இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரி அத்தியட்சகருக்கு அனுப்பப்படல் வேண்டும்.

2. **சேவை நிபந்தனைகளும் நியமன விதிகளும் :**—இப்பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளம் உரித்துடையதுமாகும். அத்துடன் விதவை, அநாதையர் இளைப்பாற்றுச் சம்பளத்துக்கு உதவு தொகை கொடுக்கவும் வேண்டும். இந்நியமனம் மூன்று வருட காலத்துக்கு தகுதிகாண் நிலையிலிருக்கும். தெரிந்தெடுக்கப்பட்ட அபேட்சகர் ஒருவர் ஏற்கனவே நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளம் உரித்துடையதுமான அரசாங்க சேவையிலிருந்தால் அவர் ஒரு குறிப்பிட்ட காலத்துக்குப் பதில் பதவியில் இருப்பார்.

3. **வேண்டப்படும் தகைமைகள் .**—ஒவ்வோர் அபேட்சகரும் பின்வரும் தகைமையுடையவர் என்பதற்கு திருப்தியான சான்று காட்டுதல் வேண்டும் :

(i) (அ) சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் பரீட்சையில் சித்தி, அல்லது

(ஆ) இரண்டு தடவைகளுக்கு மேற்படாது தோற்றப்பட்ட கல்விப்பொதுத் தராதரப் பத்திர (சாதாரண) பரீட்சையில் சிங்களம்/தமிழ், எண்கணிதம்/கணிதம் உள்ளடங்கிய ஆறு பாடங்களில் சித்தி, அல்லது

(இ) சமமான அல்லது உயர் பரீட்சையில் சித்தி;

அத்துடன் (ii) பின்வரும் தகைமையுடைத்தவராய் இருக்க வேண்டும்.

(அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் குடிசார் எந்திரவியல் பட்டம் (உயர் பட்டம் விரும்பற் பாலது) ; (சாதனை அனுபவமும்/அல்லது பயிற்றல் அனுபவம் உடையோர்க்கு சலுகை வழங்கப்படும்)

அல்லது (ஆ) குடிசார் எந்திரவியல் நிறுவனத்தின் கூட்டு அங்கத்துவ பரீட்சை பகுதி I உம் II உம் ஆகியவற்றில் சித்தி ;

அல்லது (இ) குடிசார் எந்திரவியல் டிப்ளோமாப் பட்டம் (சாதனை அனுபவமும்/அல்லது பயிற்றல் அனுபவம் உடையோர்க்கு சலுகை வழங்கப்படும் );

அல்லது (ஈ) 5 வருட சாதனை அனுபவமும்/அல்லது பயிற்றல் அனுபவத்துடன் இலங்கைத் தொழிற்பயிற்சிக் கல்லூரியால் வழங்கப்படும் மாலை நேர எந்திரவியற் பயிற்சி தராதரப் பத்திரம் (கீழ்க்காணும் குறிப்பு 2 ஐப் பார்க்க) ;

அல்லது (உ) 5 வருட சாதனை அனுபவமும்/அல்லது பயிற்றல் அனுபவத்துடன் இலங்கைத் தொழிற் பயிற்சிக் கல்லூரித் திணைக்களத்தின் கனிஷ்ட தொழில் நுட்ப உத்தியோகத்தர் தராதரப் பத்திரம் (குடிசார்) ; (கீழ்க்காணும் குறிப்பு 2 ஐப் பார்க்க)

அல்லது (ஊ) 5 வருட சாதனை அனுபவமும்/அல்லது பயிற்றல் அனுபவத்துடன் கல்லோயா அபிவிருத்திச் சபை தொழில் நுட்பப் பயிற்சி நிலையத்தின் டிப்ளோமா தராதரப் பத்திரம் ;

அல்லது (எ) சமமான, அல்லது உயர் தகைமைகள்.

குறிப்பு :(1) சிங்களத்தில் கற்பிக்கும் தகைமை இருத்தல் வேண்டும் ; அல்லது நியமனத்தின்பின் 3 வருட காலத்துக்குள் சிங்களத்தில் கற்பிக்கும் தகைமையைப் பெறல் வேண்டும்.

(2) நியமனத்துக்கு தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் நியாயமான சாதனை அனுபவமும்/அல்லது பயிற்றல் அனுபவம் உடைத்தோராய் இருத்தல் வேண்டும். 5 வருடங்களுக்குக் குறைந்த சாதனை அனுபவம் உடைய ஒருவர் தெரிவு செய்யப்படுமிடத்து அவர் வேண்டப்படும் அனுபவத்தைப் பெறும் வரை ரூபா 6,024 திரட்டிய வருடாந்தச் சம்பளத்தில் பதில் கடமை புரியும் நிலையில் நியமிக்கப்படுவார்.

4. **சம்பளத் திட்டம்.**—மேற்படி நியமனத்துக்கான திரட்டிய வருடாந்தச் சம்பளம் ரூபா 6,024—144 × 4, 180 × 8—ரூபா 8,040 (1.10.69 இற்கு முன்னர் இந்தப் பதவிக்கான இணையான சம்பளத் திட்டம் ரூபா 3,420—120 × 4 உம் 180 × 8—ரூபா 5,340 ; வருடமொன்றுக்கு.)

5. **வயது எல்லை.**— 1970 நவம்பர் பத்தாம் தேதிக்கு 40 வயதுக்கு மேற்படாதவராயும் 21 வயதுக்குக் குறையாதவராயும் இருத்தல் வேண்டும். (கூடிய வயதெல்லை, ஏற்கனவே அரசாங்க சேவையில் இருப்பவர்களைப் பாதிக்காது.)

6. விண்ணப்பதாரர் கீழ்க்காண்பவற்றின் பிரதிகளை (மூலப் பிரதிகள் அல்ல) தங்கள் விண்ணப்பங்களுடன் இணைக்க வேண்டும் :

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (குறிப்பு :—ஞானஸ்நானச் சான்றிதழ்களோ, அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைப் பிரமாணங்களுக்கமைய வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழோ ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா.)

(ஆ) தான் பெற்றிருக்கும் ஆகக்கூடிய கல்வித் தராதரங்களும் தொழிற் பயிற்சித் தராதரங்களும் ; அத்துடன்,

(இ) மேற்படி நியமனத்துக்கு விண்ணப்பதாரரின் தகைமையைக் குறிக்கும் சமீபத்தில் பெறப்பட்ட தகைமை, ஒழுக்க நற்சான்றிதழ்கள்.

குறிப்பு :—(ஏற்கனவே அரசாங்க சேவையில் உள்ள அபேட்சகர்கள் மேலே குறிப்பிட்ட உப பிரிவு (இ) இல் வேண்டப்பட்ட நற்சான்றிதழ்களை அனுப்பத் தேவையில்லை).

7. விண்ணப்பமும் ஏனைய தேவையான பத்திரங்களும் பதிவுத் தபால் மூலம் அத்தியட்சகர், இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரி, கட்டுபத்த, மொறட்டுவ என்ற விலாசத்துக்கு அனுப்பப்படல் வேண்டும்.

8. இந்த வர்த்தமானியில் பகுதி I தொகுதி II இன் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவைப் பகுதி நியமனங்களுக்குரிய பொது நிபந்தனைகளைப் பார்வையிடுமாறு வேண்டிக் கொள்ளப்படுகின்றது.

9. விண்ணப்பங்களுக்குப் பதிலுரை வழங்கப்படமாட்டாது.

எல். எச். சுமனதாச,
அத்தியட்சகர்.

இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரி,
கட்டுபத்த, மொறட்டுவ,
16 ஒக்டோபர் 1970.

## விண்ணப்பப் பத்திரம்

**இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரி, கட்டுபத்த, மொறட்டுவ**

**குடிசார் எந்திரவியல் போதனாசிரியர் பதவி, தரம் II**

1. முழுப் பெயர் (பெரிய எழுத்துக்களில்) :————.

2. விலாசம் :————.
(விலாசத்தில் நிகழும் மாற்றங்களை உடனடியாக அறிவிக்க வேண்டும்)

3. சாதியம் :————
(அ) பரம்பரை இலங்கைக் குடியினரா ; அல்லது (ஆ) பதிவு இலங்கைக் குடியினரா என்பதைக் குறிப்பிடுக. பதிவு இலங்கைக் குடியினராயின் சான்றிதழின் இலக்கத்தையும் தேதியையும் குறிப்பிடுக.)

4. (அ) விண்ணப்பம் முடிவுறும் தேதியில் சரியான வயது :—
வருடம் :———— மாதம் :———— நாள் :————.
(ஆ) பிறந்த தேதி :—
வருடம் :———— மாதம் :———— நாள் :————.
(பிறப்புச் சான்றிதழின் பிரதியை இணைக்க).

5. பிறந்த இடம் :—
(அ) விண்ணப்பதாரர் :————.
(ஆ) விண்ணப்பதாரரின் தந்தை :————.
(இ) விண்ணப்பதாரரின் தந்தை வழிப் பேரனார் :————.
(ஈ) விண்ணப்பதாரரின் தந்தை வழிப் பூட்டனார் :————.

6. (அ) விவாகமானவரா, ஆகாதவரா, விதவையா, அல்லது மனைவியிழந்தவரா ? :————
(ஆ) விவாகமானவராயின் :— (i) விவாகமான தேதி :————.
(ii) பிள்ளைகளின் தொகை :————.

7. (அ) 15 ஆம் வயதிலிருந்து சென்ற பாடசாலைகள், கல்லூரிகள், கல்வி நிலையங்கள் :—

| பொதுக் கல்வி | | | தொழில், தொழில்நுட்பக் கல்வி, இருப்பின் | | |
|---|---|---|---|---|---|
| பாடசாலை அல்லது கல்லூரி | இருந்து | வரை | கல்வி நிலையங்கள் | இருந்து | வரை |
| | | | | | |

(ஆ) இறுதிப் பாடசாலையினின்றும் விலகிய தேதி :————.

8. கல்வித் தகைமையும் சித்தியடைந்த இறுதிப் பரீட்சையும் தேதியுடன் தருக :—
(அ) சிங்களம் :————.
(ஆ) ஆங்கிலம் :————.
(இ) தமிழ் :————.

9. தொழில் உடன்/அல்லது தொழில் நுட்பத் தகைமைகள் ஏதாவது பெற்றிருப்பின் அவற்றின் (அ) தேதியும் (ஆ) கல்வி நிலையங்களின் பெயர்களும் :————.

10. வாசித்தல், எழுதல், உரையாடல், உரைபெயர்த்தல் என்பவற்றில் தகைமை :—
(அ) சிங்களம் :————.
(ஆ) தமிழ் :————.
(இ) ஆங்கிலம் :————.

11. விசேட தகைமைகள் : விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட விசேட தகைமை/அல்லது அனுபவம் அல்லது இரண்டும் உண்டா ? அப்படியாயின் தேதிகளுடன் முழு விபரங்களையும் தருக :————.

12. சட்டமுறை நீதிமன்றத்தில் யாதேனும் குற்றம் செய்த தவறுக்காக குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டால் குற்றத்தின் (அ) தேதி, (ஆ) வழக்கின் எண், (இ) குற்றத்தீர்ப்பின் விபரம் என்பனவற்றைத் தருக :————.

13. கடன் தொல்லைகள் உண்டா ? அவ்வாறாயின் அதன் விபரங்கள் :————.

14. வேறு விபரங்கள் (விசேட உரிமைகள் முதலியன) :————.

15. நற்சான்றிதழ் வழங்கியவர்களின் பெயர்களும் பதவிகளும் :————. (இச்சான்றிதழ்களின் பிரதிகளை (மூலப் பிரதிகள் அல்ல) இணைக்குக. ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ளவர்கள் இவற்றை அனுப்ப வேண்டியதில்லை.)

16. முன்னைநாள் படைச் சேவையாளரெனின், பின்வரும் விவரங்கள் :—

(அ) கூறு :————.

(ஆ) வரிசைப் பதவி :————.

(இ) சேர்ந்த , விலகிய தேதி :————.

17. (அ) பாடசாலையினின்று விலகியதிலிருந்து வகித்த உத்தியோகங்கள் :—

(i) வகித்த பதவி :————.

(ii) நியமனத் தேதி :————.

(iii) விலகிய காரணம் :————.

(ஆ) அரசாங்கத்தில் அல்லது உள்ளூர் அதிகார சபைகளில் முன்னர் தொழில் புரிந்தவராயின் , நிரந்தரமானதா, அல்லது தற்காலிகமானதா என்றும் அது முடிவுற்ற நேரத்தினது விபரங்களையும் தருக :—

(அ) தொழில் :————.

(ஆ) தேதிகள் :————.

(இ) சேவை முடிவுற்ற காரணம் :————.

18. தற்போது உத்தியோகத்திலிருப்பின் பின்வரும் விபரங்களைத் தருக :—

(i) நிறுவனம்/திணைக்களம் :————.

(ii) பதவியும் பதவித் தரமும் :————.

(iii) இளைப்பாற்றுச் சம்பளம் உடையதா, தற்காலிகமானதா, சமயோசிதமானதா :————.

(iv) தற்போதைய சம்பளமும் (படிகள் தவிர்ந்து), சம்பளத் திட்டமும் :————.

(v) அடுத்த சம்பள ஏற்றத் தேதி :————.

இவ் விண்ணப்பத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதியளிக்கின்றேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை, அல்லது பிழையானவை எனக் காணப்படின், தெரிவு செய்யப்படுவதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும், நியமிக்கப்பட்டதற்குப் பின்னராயின் எவ்வித நட்ட ஈடுமின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என அறிவேன்.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

இடம் :————.
தேதி :————.

10–840—23.10.70 ந். திகதிய வர்த்தமானி இல. 14,929

---

## கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சு

### பரிசோதகர் பதவிகள்

கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சில் பரிசோதகர்கள் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் கீழ்க்காணும் மாதிரிப் பத்திர அமைப்பில் அமைந்து, கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு 1970 நவம்பர், 14 ஆம் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக அனுப்பப்படல் வேண்டும்.

2. **சம்பள விகிதம்.**—இப்பதவிக்குரிய திரட்டுச் சம்பள விகிதம், ஆண்டொன்றுக்கு ரூபா 3576 ல் ஆரம்பமாகி வருடம் ரூபா 144 கொண்ட 21 வருட உயர்வுகளையும் ரூபா 180 கொண்ட 4 வருட உயர்வுகளையும் உடையதாகி ரூபா 7,320/– வரை உயரும். ரூபா 4,440/– ரூபா 5,502/– ரூபா 6,780/– ஆகிய நிலைகளை அடையுமுன் திறமைகாண் தடைகள் உண்டு.

3. **வேலையின் நியதிகள்.**—இப்பதவி நிரந்தரமும் இளைப்பாற்றுச் சம்பளமும் உடையது. விதவைகள் அனாதைகள் இளைப்பாற்றுச் சம்பளத் திட்டத்திற்கு சாந்தா செலுத்தப்படும்.

4. **கல்வி மற்றும் ஏனைய தராதரங்கள்.**—ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பின்வரும் தகைமைகளை உடையவர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்டுதல் வேண்டும்.

(அ) அங்கீகரிக்கப்பட்ட சர்வகலாசாலை ஒன்றின் இடைநிலைப் பரீட்சையில் சித்தியெய்தியவராகவும் அல்லது இலங்கை கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரணப்) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத பரீட்சையில் சிங்கள மொழி அல்லது தமிழ் மொழியுடன் எண்கணிதம்/அல்லது கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியும், எச்சந்தர்ப்பத்திலேனும் இரண்டு திறமைச் சித்திகளும் உடையவராகவும், அத்துடன் இலண்டன் சர்வ கலாசாலை அல்லது இலங்கை கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சையில் ஒரே தடவையில் 3 பாடங்களிலும் அல்லது இரண்டு தடவைகளில் 4 பாடங்களிலும் சித்தியெய்தியவராகவும் ; அல்லது

(ஆ) இலங்கை தொழில் நுட்பக் கல்லூரியில் கனிஷ்ட தொழில் நுட்ப உத்தியோகத்தர் பத்திரப் பரீட்சையில் சித்தியெய்திய வராகவும் இருக்கவேண்டும்.

**குறிப்பு.**—அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் சிரேஷ்ட கல்வித் தராதரப் பத்திரப் பரீட்சை அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்தியடைந்தவர்களாகவும், 10 வருடங்கள் திருப்திகரமான சேவையும் உடையவர்களாகவும் இருப்பின் அவர்களின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

(இ) 1970 நவம்பர், 14 ஆம் திகதியில் 21 வயதுக்குக் குறையாதவராகவும் 30 வயதுக்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும். ஏற்கெனவே அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு இந்த வயதுக் கட்டுப்பாடு கிடையாது.

5. விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களுடன் கீழ்க்காணும் சாதனங்களின் பிரதிகளை (மூலங்களை அல்ல) அனுப்பவேண்டும் :

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப் பட்ட சமய தீட்சைச் சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது).

(ஆ) கல்வி, உயர்தொழில் அல்லது தொழில் நுட்பத் துறைகளில் ஆகக்கூடிய தராதரப் பத்திரங்கள்.

(இ) மூன்று அண்மைக் காலத்து குணச் சான்றிதழ்கள். (ஏற்கனவே அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரர்கள் இப்பத்திரங்களை சமர்ப்பிக்க வேண்டியதில்லை).

**குறிப்பு.**—இந்த சான்றுப் பத்திரங்களினதும் சாதனங்களினதும் பிரதிகள் திருப்பியனுப்பப்படமாட்டா.

6. விண்ணப்பங்களும் அதுபற்றிய ஏனைய கடிதத் தொடர்புகளும் கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சின் நிரந்தரக் காரிய தரிசிக்கு மாத்திரம் அனுப்பப்படல் வேண்டுமேயன்றி அமைச்சின் வேறெந்த உத்தியோகத்தருக்கும் அனுப்பப்படல் ஆகாது.

7. அரசாங்க சேவையில் உள்ளோரின் விண்ணப்பங்கள் அவர்களின் திணைக்களத் தலைவர்களின் ஊடாக அனுப்பப்படல் வேண்டும். குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் இக்கந்தோரில் கிடைக்கும் விண்ணப்பங்கள், குறிப்பிட்ட காலத்திற்கு முன்னர் திணைக்களத் தலைவர்களால் பெறப்பட்டு ஏற்பட்ட தாமதத்திற்கு பெறுமதியான காரணங்களைக் கூறி அதனை ஏற்குமாறு திணைக்களத் தலைவர் சிபார்சு செய்தாலன்றி, ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்கு பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் முதலாம் பாகம் இரண்டாம் பிரிவின் ஆரம்பத்தில் வெளியிடப்பட்டுள்ளது. அவற்றைப் பார்க்க.

ஜே. வீ. பொன்சேகா,
நிரந்தரக் காரியதரிசி.

கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சு,
48, ஸ்ரீ ஜினரத்தின வீதி,
கொழும்பு 2,
1970 ம் ஆண்டு ஒக்தோபர் மீ 15 ந உ.

## மேற்குறிப்பிடப்பட்ட மாதிரிப் பத்திரம்

**பரிசோதகர் பதவி, கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சு**

1. விளம்பரத்திற்குரிய தொடர்பு : ————.
2. விண்ணப்பதாரரின் முழுப் பெயர் :————.
(குடும்பப் பெயர் முதலில்)
3. தபால் விலாசம் : ————.
4. (அ) வயதும் பிறந்த திகதியும் : ————.
(பிறப்புச் சான்றிதழின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்)
(ஆ) விவாகம் ஆனவரா ; ஆகாதவரா : ————.
5. தேசிய இனம், எவ்வாறு பெறப்பட்டது : ————.
6. கீழ் வருவோர் பிறந்த இடங்கள் :—.
(அ) விண்ணப்பதாரர் : ————.
*(ஆ) விண்ணப்பதாரரின் தகப்பனர் : ————.
(இ) விண்ணப்பதாரரின் தந்தைவழிப் பாட்டனர் : ————.
(ஈ) விண்ணப்பதாரரின் தந்தைவழிப் பெரிய பாட்டனர் : ————.
7. கல்வித் தகைமைகளும் கடைசியாகச் சித்தியெய்திய பரீட்சையில் எடுத்த பாடங்களும் (திகதிகளுடன்) : ————.
8. கல்வி கற்ற இடமும் பாடசாலையை விட்டு விலகிய திகதியும் : ————.
9. பாடசாலையை விட்டு விலகிய நாள்முதல் பார்த்த தொழில்களும் அவற்றின் திகதிகளும் : ————.
அரசாங்கத்தின் கீழ் சேவைகள் யாதும் இருப்பின் அவற்றின் முழு விபரங்களும் : ————.
10. சிங்களத்திலும் தமிழிலும் வாசிக்கவும் எழுதவும் உடைய தகைமைகள் : ————.
11. விசேட தகைமைகளின் விபரங்கள் : ————.
அதாவது : உயர் தொழில், தொழில் நுட்பம் ஆகியன : ————.
12. குணச்சான்றிதழ்கள் அளித்தவர்களின் பெயர்களும் பதவிகளும் : ————.
(இச்சான்றிதழ்களின் பிரதிகளேயன்றி, மூலப்பிரதிகள் இணைக்கப்படலாகாது)
13. விசேட கோரிக்கைகளின் விபரங்கள் : ————.
(உதாரணம் : இத்தகைய பதவியிலான அனுபவங்கள்)

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி : ————.

*விண்ணப்பதாரர் இலங்கையில் பிறந்திருப்பின் (ஆ) அல்லது (இ), (ஈ) இரண்டும் (அ) வுடன் நிரப்பப்படல் வேண்டும். விண்ணப்பதாரர் இலங்கையில் பிறந்திருக்காதிருப்பின் (அ) வைத் தவிர (ஆ), (இ) அல்லது (இ) யும் (ஈ) யும் நிரப்பப்படல் வேண்டும்.

10-846—23.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,929

---

## உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

### III ஆம் தரப் பரீட்சையாளர் பதவிகள்

அரசாங்க சேவையில் ஏற்கனவே உள்ளவர்களிடமிருந்து உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திலுள்ள மூன்றாந்தரப் பரீட்சையாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதன்கீழ் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தில் விண்ணப்பங்களை 7.11.1970 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.—**

(i) இப்பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துமுடையது. வி. அ. உ. ஓய்வூதியத் திட்டத்திற்கு பணவுதவிகள் செய்யப்படும்.

(ii) தெரிவுசெய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் முடியுமானளவு சிறிது கால எல்லைக்குள் சட்டத்திலும், வருமானவரி செயல் முறையிலும், பூதல்வரி, முத்திரைகள் வரி, தனிப்பட்ட வரி ஆகியவற்றிலும் தங்களைப் பழக்கப்படுத்திக் கொள்வதுடன் நன்கு பரிச்சயப்படும் படியும் கேட்கப்படுவர்.

(iii) திணைக்கள கோப்புக்களில் ஏற்படுத்தப்பட்ட வரிமதிப்புக்களை பரீட்சிப்பதுடன் கணக்குப் பரிசோதிக்கும்படியும், உள்நாட்டு இறைவரி ஆணையாளர் அவசியம் எனக்கருதும் மற்றும் கடமைகளையும் நிறைவேற்றும்படியும் கேட்டுக்கொள்ளப்படுவர்.

3. **வேதன அளவுத் திட்டம்.—**

(i) மேலெழுந்தவாரியான வேதனம் ஆண்டொன்றுக்கு ரூபா 3,900. இது 180 ரூபாவைக் கொண்ட எட்டு ஆண்டு உயர்வுகளாலும், 240 ரூபாவைக் கொண்ட ஐந்து ஆண்டு உயர்வுகளாலும் ரூபா 6,540 வரை உயர்வடையும்.

(ii) திரட்டிய வேதனம் ஆண்டொன்றுக்கு ரூபா 6,600. இது 180 ரூபாவைக் கொண்ட எட்டு ஆண்டு உயர்வுகளாலும், 240 ரூபாவைக் கொண்ட ஐந்து ஆண்டு உயர்வுகளாலும் ரூபா 9,240 வரை உயர்வடையும்.

4. **தகைமைகள்.—**

(அ) விண்ணப்பக்காரர்கள் நிறைவேற்று எழுதுவினைஞர் வகுப்பின் முதலாம் தரத்தில் அல்லது இரண்டாந்தரத்தில் அல்லது சமானமான தரத்திலும், பத்து வருடங்களுக்குக் குறையாத சேவையை பூர்த்தி செய்தவர்களாகவும் அதில் ஆகக் குறைந்தது நாலு வருடங்கள் நிறைவேற்று எழுது வினைஞர் வகுப்பில் அல்லது சமமான தரங்களிலும் இருத்தல் வேண்டும் ; அல்லது

(ஆ) மாற்றப்படக் கூடிய சுருக்கெழுத்தாளர் சேவையில் 10 வருட சேவையைப் பூர்த்தி செய்த சுருக்கெழுத்தாளர்கள் ; அல்லது

(இ) தட்டெழுத்தாளர் சேவையில் 10 வருட சேவையைப் பூர்த்தி செய்து அதில் குறைந்தது 4 வருடங்கள் உயர்தரத்தில் சேவை செய்த தட்டெழுத்தாளர்கள்.

குறிப்பு.—கணக்கில் தகைமையுடையவர்களுக்கு அல்லது உள் நாட்டு இறைவரித் திணைக்கள வேலைகள் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றினையும் காட்டுமாறு கேட்கும்பொழுது, சமர்ப்பித்தல் வேண்டும் :

(அ) உயர்தரக் கல்வி அத்தாட்சிப் பத்திரம்.

(ஆ) உயர்தொழிலுக்குரியதும்/அல்லது தொழினுட்பத் தகைமை அத்தாட்சிப்பத்திரங்கள்.

(இ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய பாஷைகளில் சித்தியெய்திய உயர்தரப் பரீட்சை அத்தாட்சிப் பத்திரம்.

**குறிப்பு :**

(i) சாதனங்களையாயினும், சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கக் கூடாது.

(ii) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும் பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. விண்ணப்பங்களை தொடர்பான தலைவர்களுக்கூடாக விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் எனக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

7. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காகிய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியில் I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளன, அவற்றைப் பார்க்க.

8. விண்ணப்பங்களையும், அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் பதிவுத் தபாலில், உள்நாட்டு இறைவரி ஆணையாளர், அஞ்சல் பெட்டி இல. 515, சௌற் சதுக்கம், கொழும்பு 1 என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

ச. சிற்றம்பலம்,
உள்நாட்டு இறைவரி ஆணையாளர்.

அஞ்சல் பெட்டி இல. 515,
புதிய செயலகம்,
சௌற் சதுக்கம்,
கொழும்பு 1.

## விண்ணப்பப் படிவம்

**III ஆம் தரப் பரீட்சையாளர் பதவி—உள்நாட்டு இறைவரித் திணைக்களம்**

1. முழுப் பெயர் : ————.
(பெரிய எழுத்தில்)
2. தபால் விலாசம் : ————.
3. பிறந்த திகதி : —. வருடம் : ————. மாதம் :————. நாள் : ————.
4. 7.11.70 ஆம் திகதியன்று சரியான வயது :— . வருடங்கள் : ————. மாதங்கள் : ————. நாட்கள் :————
5. சாதியம், எப்படிப் பெறப் பெற்றது : ————.
(அ) வம்சாவழி காரணமாகவா : ————.
(ஆ) பதிவு காரணமாகவா : ————.
6. பின்வருவோர் பிறந்த இடம் : —.
(அ) விண்ணப்பதாரி : ————.
(ஆ) விண்ணப்பதாரியின் தகப்பன் : ————.
(இ) விண்ணப்பதாரியின் பாட்டன் : ————.
(ஈ) விண்ணப்பதாரியின் கொப்பாட்டன் : ————.
7. பால் : ————.
8. விவாகம் செய்தவரா, செய்யாதவரா அல்லது தாரமிழந்தவரா/விதவையா : ————.
9. கல்வி பயின்ற பாடசாலைகளினதும், கல்லூரிகளினதும் பெயர்கள் : ————.
(பிரவேசித்த, வெளியேறிய திகதிகளுடன்)
10. (i) இவ்விளம்பரத்தின் 4 ஆம் பந்தியில் உள்ள (அ) இலிருந்து (இ) வரையிலுள்ள எப்பகுதியில் நீர் தகைமை கோருகிறீர் : ————.
(ii) 10 இல் குறிக்கப்பட்டிருக்கும் தகைமை கோருவது பற்றி பின்வரும் விபரங்களைத் தருக : ————.
11. வேறு தகைமைகள் : ————.
12. கணக்குத் தகைமையிலுள்ள உமது அறிவு பற்றிய முழு விபரங்கள் : ————.
13. பின்வருவனவற்றில் பெற்றுள்ள ஆகக்கூடிய தகைமை : —.
(அ) சிங்களம் : ————.
(ஆ) தமிழ் : ————.
(இ) ஆங்கிலம் : ————.
14. யாதேனும் விசேட உரிமைகள், தகைமைகள், அனுபவம் ஆகியவை பற்றிய விபரங்கள் : ————.
15. அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியால் விதிக்கப்பட்டபடி பிணையை பணமாகவோ, அவர் கூறும் விதமாகவோ செலுத்த ஆயத்தமா? :————.
16. வேறு விபரங்கள் : ————.

இவ்விண்ணப்பப் படிவத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையும் என இத்தால் உறுதியளிக்கின்றேன். இங்கு கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும், நியமிக்கப்பட்டதற்குப் பின்னராயின் எவ்வித நஷ்ட ஈடின்றியும் விலக்கப்படுவதற்கு நான் பாத்திரமாவேன் எனவும் அறிவேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : ————.

10-844—23.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,929.

---

## கல்வி அமைச்சு

**வாணிகப் பட்டதாரிகள்/வாணிகப் பட்டப் பரீட்சைப் பெறுபேறுகளை எதிர் பார்த்திருப்போர்/அங்கீகரிக்கப்பட்ட வாணிகத் தராதரப் பத்திரம் பெற்றிருப்போர் ஆகியோருக்கான உதவி ஆசிரியர் பதவிகள்**

அரசினர் மத்திய மகா/மகா வித்தியாலயங்களிலுள்ள உதவி ஆசிரியர் பதவிகளுக்கு வாணிகப் பட்டதாரிகள்/வாணிகப் பட்டப் பரீட்சை பெறுபேறுகளை எதிர்பார்த்திருப்போர்/அங்கீகரிக்கப்பட்ட வாணிகத் தராதரப் பத்திரம் பெற்றிருப்போர் ஆகிய (ஆண், பெண்) இரு பாலாரிடமுமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. கீழ்க்காணும் மாதிரிப் படிவ முறையில் தயாரிக்கப்படும் விண்ணப்பங்கள் " நிரந்தரச் செயலாளர் (பாடசாலைகள் நிர்வாகக் கிளை), கல்வி அமைச்சு, மலாய் வீதி, கொழும்பு 2 " என்ற விலாசத்துக்கு 1970 ஆம் ஆண்டு நொவெம்பர் மாதம் 10 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் காகித உறையின் மேல் " வாணிக உதவி ஆசிரியர் பதவி ( ) " எனத் தெளிவாக அடையாளமிடப்பட வேண்டும். (எவ்வகுதியின் கீழ் விண்ணப்பம் செய்யப்படுகிறதென அடைப்புக் குறிக்குள் குறிப்பிடப்பட வேண்டும்).

3. **சம்பளமும் சகாயப்படிகளும்.—**

(i) 1 ஆம் அல்லது 2 ஆம் வகுப்புச் சிறப்புப் பட்டம் பெற்ற பட்டதாரிகளுக்கு :—
ரூ. 5,736—11 × 144—6 × 180—8,400 வருடாந்தம்.
பட்டதாரிகளுக்கு :—
ரூ. 5,160—10 × 144—7 × 180—7,860 வருடாந்தம்.
விதிக்கப்பட்டுள்ள விதிதங்களின் பிரகாரம் விவாகச் சகாயப்படி வழங்கப்படும்.

(ii) பட்டப் பரீட்சைப் பெறுபேறுகளை எதிர்பார்த்திருப்போருக்கு :—
ரூ. 3,450—19 × 90—3 × 144—5,542 வருடாந்தம்.
விதிக்கப்பட்டுள்ள விதிதங்களின் பிரகாரம் விவாகச் சகாயப்படி வழங்கப்படும்.

(iii) அங்கீகரிக்கப்பட்ட வாணிகத் தராதரப் பத்திரம் பெற்றிருப்போருக்கு :—
ரூ. 3,720—16 × 90—5 × 144—5,880 வருடாந்தம்.
ரூ. 4,980 இல் வினைத்திறமைகாண் தடை.
விதிக்கப்பட்டுள்ள விதிதங்களின் பிரகாரம் விவாகச் சகாயப்படி வழங்கப்படும்.

குறிப்பு.—1.10.69 க்கு முன் இப்பதவிகளுக்கு அமைந்த சம்பள அளவுத் திட்டங்கள், அவை பொருத்தமுடையவையும் அமைபவையும் எனக் கருதப்படுமிடத்து, அநுமானச் சம்பள அடிப்படையில் தொடர்ந்து நடைமுறையில் இருக்கும்.

4. **தகவுத்திறன்.**—விண்ணப்பதாரி ஒவ்வொருவரும் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்பவராகத் திருப்திகரமான சான்று காட்ட வேண்டும் :—
(அ) சிறந்த நல்லொழுக்கம் உடையவராய் இருக்க வேண்டும்.
(ஆ) தீவின் எப்பகுதியிலேனும் சேவை புரிய ஆயத்தமாய் இருப்பதுடன் அதற்கான உடல்நலம் உடையவராயும் இருக்க வேண்டும்.
(இ) இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும்.
(ஈ) **பட்டதாரிகளைப் பொறுத்தவரையில்—**
(i) 10.11.1970 அன்று 22 வயதுக்குக் குறையாதவராயும் 45 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது.
(ii) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழக வாணிகப் பட்டதாரியாக/கணக்கியலை அல்லது வங்கி முறையை விசேட பாடமாக பட்ட இறுதிப் பரீட்சைக்கு எடுத்த பொருளியல் (விசேட) பட்டதாரியாக/தொழில் நிர்வாகப் பட்டதாரியாக இருக்க வேண்டும்.

அல்லது

(iii) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியால் வழங்கப்படும் வாணிகத் தகுதித் தேர்வு இறுதித் தராதரப் பத்திரம் பெற்றிருக்க வேண்டும்.

இவற்றுடன்

பட்டப்/தகுதித் தேர்வுப் பரீட்சைக்கு எடுத்த பாடங்களை சிங்கள/தமிழ் மொழிமூலம் க. பொ. த. (சாதாரணதர), க. பொ. த. (உயர்தர) பத்திர வகுப்புகளில் கற்பிக்கக் கூடியவராய் இருப்பதுடன் க. பொ. த. (சாதாரணதர) பத்திரப் பரீட்சையில் அல்லது உயர்ந்த பரீட்சையில் சிங்கள/தமிழ் மொழியில் சித்தி அடைந்திருக்க வேண்டும்.

(உ) **பட்டப் பரீட்சைப் பெறுபேறுகளை எதிர்பார்த்திருப்போரைப் பொறுத்தவரையில்—**
(i) 10.11.1970 அன்று 18 வயதுக்குக் குறையாதவராயும் 45 வயதுக்குக் மேற்படாதவராயும் இருக்க வேண்டும். ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது.

(ii) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழக வாணிகப் பட்ட இறுதிப் பரீட்சைக்கு/கணக்கியலை அல்லது வங்கி முறையை விசேட பாடமாக எடுத்து பொருளியல் (விசேட) பட்ட இறுதிப் பரீட்சைக்கு/தொழில் நிருவாகப் பட்டப் பரீட்சைக்குத் தோற்றியவராக இருக்க வேண்டும்.

அல்லது

(iii) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியால் வழங்கப்படும் வாணிகத் தகுதித் தேர்வுத் தராதரப் பத்திர இறுதிப் பரீட்சைக்குத் தோற்றியவராக இருக்க வேண்டும்.

இவற்றுடன்

பட்டப்/தகுதித் தேர்வுப் பரீட்சைக்கு எடுத்த பாடங்களை சிங்கள/தமிழ் மொழிமூலம் க. பொ. த. (சாதாரணதர), க. பொ. த. (உயர்தர) பத்திர வகுப்புகளில் கற்பிக்கக் கூடியவராய் இருப்பதுடன் க. பொ. த. (சாதாரணதர) பத்திரப் பரீட்சையில் அல்லது உயர்ந்த பரீட்சையில் சிங்கள/தமிழ் மொழியில் சித்தி அடைந்திருக்க வேண்டும்.

(ஊ) **அங்கீகரிக்கப்பட்ட வாணிகத் தராதரப் பத்திரம் பெற்றிருப்போரைப் பொறுத்தவரையில்—**

(i) 10.11.1970 அன்று 18 வயதுக்குக் குறையாதவராயும் 45 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது.

(ii) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியால் அல்லது ஒரு கனிட்ட தொழில்நுட்ப நிலையத்தால் அல்லது லண்டன் வாணிக சம்மேளனத்தால் வழங்கப்படும் இரண்டு உயர்தர வாணிக தராதரப் பத்திரங்களைப் பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

(iii) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியால் அல்லது ஒரு கனிட்ட தொழில்நுட்ப நிலையத்தால் அல்லது லண்டன் வாணிக சம்மேளனத்தால் வழங்கப்படும் ஒரு உயர்தர வாணிக தராதரப் பத்திரமும் கீழ்த்தர வாணிக மாற்றுத் தராதரப் பத்திரமும் பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

(iv) பரீட்சைத் திணைக்களத்தால் வழங்கப்படும் வாணிகத் தராதரப் பத்திரத்தின் இரு பிரிவுகளையும் பெற்றிருக்க வேண்டும். (இத்தராதரப் பத்திரங்கள் வாணிக பாடங்களுடன் கூடிய க. பொ. த. (சாதாரணதர) அல்லது க. பொ. த. (உயர்தர) பத்திரங்களைக் குறிப்பனவல்ல).

இவற்றுடன்

பட்டப்/தகுதித் தேர்வுப் பரீட்சைக்கு எடுத்த பாடங்களை சிங்கள/தமிழ் மொழிமூலம் க. பொ. த. (சாதாரணதர), க. பொ. த. (உயர்தர) பத்திர வகுப்புகளில் கற்பிக்கக் கூடியவராய் இருப்பதுடன் க. பொ. த. (சாதாரணதர) பத்திரப் பரீட்சையில் அல்லது உயர்ந்த பரீட்சையில் சிங்கள/தமிழ் மொழியில் சித்தி அடைந்திருக்க வேண்டும்.

5. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களுடன் பின்வருவனவற்றின் பிரதிகளை இணைத்தனுப்ப வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுப் பத்திரம்.

(ஆ) பெற்றுள்ள ஆகக்கூடிய கல்வித் தராதரப் பத்திரமும் சிங்கள/தமிழ் மொழியில் சித்தியடைந்த ஆகக்கூடிய பரீட்சைத் தராதரப் பத்திரமும்.

(இ) விண்ணப்பதாரி வதியும் பகுதிக் கிராம சேவகரிடமிருந்து பெறப்பட்டு அப்பகுதிக் காரியாதிகாரியால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதான ஒன்று உட்பட இரு நற்சாட்சிப் பத்திரங்கள்.

**குறிப்பு (1) :** மேற்குறித்த சாதனங்களின் பிரதிகளே விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும்—மூலப்படிகளல்ல.

**குறிப்பு (2) :** மேற்குறித்த சாதனங்களின் பிரதிகளை இணைத்தனுப்பதவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**குறிப்பு (3) :** மேற்குறித்த சாதனங்களின் மூலப் படிகள் நியமன நேரத்தின்போது வேண்டப்படுமிடத்து சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

6. அரசினர் சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள், அவர்கள் சேவை புரியும் திணைக்களத் தலைவர்கள் மூலமும் கூட்டுத்தாபனங்களில் சேவை புரியும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் உரிய கூட்டுத்தாபனத் தலைவர்கள் மூலமும் அனுப்பப்பட வேண்டும்.

7. **நியமன நியதிகள்.—**

(i) இப்பதவிகள் நிரந்தரமானவையும் உபகாரச் சம்பள உரித்துடையனவையுமாகும்.

(ii) ஆண் நியமதாரிகள் விதவைகள், அனாதைகள் உபகாரச் சம்பளத் திட்டத்துக்குக் கட்டணம் செலுத்த வேண்டும்.

(iii) தகுதிகாண் காலம் 3 வருடங்களாகும்.

(iv) அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைக் காரியப்படுத்துதற்கு, குறிப்பாக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்தற்பொருட்டு ஏற்கனவே ஆக்கப்பட்டுள்ள விதிகளுக்கு அல்லது இனிமேல் ஆக்கப்படும் விதிகளுக்கு அமைய நியமதாரி ஒழுக வேண்டும்.

(v) இந்நியமனம் அரசினர் சேவை ஆணைக்குழு விதிகள், நிதிப் பிரமாணங்கள், நிருவாகப் பிரமாணங்கள், அரசாங்கத்தால் இனிமேல் விதிக்கப்படும் நிபந்தனைகள் ஆகியவற்றிற்கு அமைவதாகும்.

8. விண்ணப்பங்களும் அவை தொடர்பான ஏனைய கடிதங்களும் இவ்வறிவித்தலின் 2 ஆம் பந்திக்கமைய விலாசமிடப்பட வேண்டும் ; இவ்வமைச்சின் எவ்வுத்தியோகத்தரின் பெயருக்கும் அவை அனுப்பப்படலாகா.

9. இவ் வர்த்தமானியின் I ஆம் பகுதி, II ஆம் பிரிவில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசினர் சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்கு அமையும் பொது நிபந்தனையைக் கவனிக்க.

10. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுதற்கான கடைசித் திகதியின் பின் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

11. அஞ்சலில் ஏற்படக்கூடிய தாமதத்தைத் தவிர்க்கு முகமாக விண்ணப்பங்களைப் பதிவஞ்சல் மூலம் அனுப்புமாறு விண்ணப்பதாரிகளுக்கு ஆலோசனை கூறப்படுகிறது.

பி. உடகம,
நிரந்தரச் செயலாளரும் மகா
வித்தியாதிபதியும்.

கல்வி அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
15.10.1970.

## மாதிரி விண்ணப்பப் படிவம்

**வாணிகப் பட்டதாரிகள்/வாணிகப் பட்டப் பரீட்சை பெறுபேறுகளை எதிர்பார்த்திருப்போர்/அங்கீகரிக்கப்பட்ட வாணிகத் தராதரப் பத்திரம் பெற்றிருப்போர்* ஆகியோருக்கான உதவி ஆசிரியர் பதவிக்கான விண்ணப்பம்**

1. முழுப் பெயர் (சொந்தப் பெயர் முதல்) : ———.
(தெளிவாக எழுதவும்)

2. சொந்த விலாசம் : ———.

3. பால் : ———.

4. விவாகம் செய்தவரா/செய்யாதவரா ? :———.
(விவாகஞ் செய்தவராயின் கணவன்/மனைவி அரசினர் ஊழியரா ? அங்ஙனமாயின் விபரங்கள் கொடுக்கவும்)

5. விண்ணப்பதாரி பிறந்த திகதி : ———.

6. 10.11.1970 அன்றுள்ளபடி வயது :———.

7. பின்வருவோர் பிறந்த இடம் :—
(அ) விண்ணப்பதாரி :———.
(ஆ) விண்ணப்பதாரியின் தகப்பன் :———.
(இ) விண்ணப்பதாரியின் தாய் :———.

8. சாதியம் :———.
இலங்கையராயின், வம்சாவழி காரணமாகவா பதிவு காரணமாகவா ? :———.

9. விண்ணப்பதாரி அரசினர் ஊழியராயின் அல்லது கூட்டுத்தாபன வேலையாளராயின் சேவை விபரங்களைக் கொடுக்கவும் :———.
(அ) திணைக்களத்தின்/கூட்டுத்தாபனத்தின் பெயர் :———.
(ஆ) வகிக்கும் பதவி :———.
(இ) நியமனத் திகதி :———.

10. தற்போது யாதேனும் உத்தியோகத்திலிருப்பின், உத்தியோகத்தையும் சேவை விபரங்களையும் கொடுக்கவும் :———.

11. கல்வித் தகைமைகள் :—
(அ) **பட்டதாரிகள் தொடர்பில்—**
பட்டம்/தகுதித் தேர்வுப் பற்றிய விபரங்கள் :
(i) சிறப்பு அல்லது பொது :———.
(ii) வகுப்பு :———.
(iii) பல்கலைக் கழகம்/நிலையம் :———.

(iv) பட்டம் பெற்ற வருடம் :————.

(v) பட்ட/தகுதித் தேர்வுப் பரீட்சைக்கு எடுத்த பாடங்கள் : ————.

(vi) இடைமாணிப் பரீட்சைக்கு எடுத்த பாடங்கள் :————.

(vii) எம்மொழிமூலம் :————.

(ஆ) பட்டப் பரீட்சைப் பெறுபேறுகளை எதிர்பார்த்திருப்போர் தொடர்பில்—

(i) பட்டப் பரீட்சைப் பெறுபேறுகளை எதிர்பார்ப்பவரா ? : ————.

(ii) பல்கலைக் கழகம்/நிலையம் :————.

(iii) வருடம் :————.

(iv) பட்ட/தகுதித் தேர்வுப் பரீட்சைக்கு எடுத்த பாடங்கள் : ————.

(v) எம்மொழி மூலம் :————.

(இ) அங்கீகரிக்கப்பட்ட வாணிகத் தராதரப் பத்திரம் பெற்றிருப்போர் தொடர்பில்—

(i) தொழில்நுட்ப நிலைய அல்லது லண்டன் வாணிக சம்மேளனத் தகைமைகள் பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் பின்வரும் விபரங்களைக் கொடுக்க வேண்டும் :—

| நிலையத்தின் பெயர் | தராதரப் பத்திரத்தின் பெயர் | வருடம் | எம்மொழி மூலம் |
|---|---|---|---|
| ............ | ............ | ...... | ....... |

(ii) பரீட்சைத் திணைக்களத்தால் வழங்கப்படும் வாணிகத் தராதரப் பத்திரங்கள் பெற்றிருப்போர் பின்வரும் விபரங்களைக் கொடுக்க வேண்டும் :—

| தராதரப்பத்திரத்தின் பிரிவு | வருடம் | எம்மொழி மூலம் |
|---|---|---|
| ......................... | ...... | ....... |

12. சிங்களத்தில்/தமிழில் பெற்றுள்ள ஆகக்கூடிய தகைமை :————.

13. உயர்தொழிற் தகைமைகள் (இருப்பின்) :————.

14. முந்திய உத்தியோகம் :————.

(i) ஆசிரியராக—

(அ) பதிவிலக்கம் :————.

(ஆ) சேவை விபரங்கள் :—

| பாடசாலைப் பெயர் | வகித்த பதவி | தொடக்கம் | வரை |
|---|---|---|---|
| ............ | ............ | ........ | ....... |

(ii) அரசினர்/கூட்டுத்தாபன ஊழியராக :—

| திணைக்களம்/ கூட்டுத்தாபனம் | வகித்த பதவி | தொடக்கம் | வரை |
|---|---|---|---|
| ............ | ............ | ........ | ....... |

15. ஆசிரியராக/அரசாங்க/கூட்டுத்தாபன ஊழியராக சேவை நிறுத்தப்பட்டதற்கான/சேவையிலிருந்து விலக்கப்பட்டதற்கான/பதவியைத் துறந்ததற்கான/சேவையிலிருந்து விடுபட்டதற்கான காரணங்கள் (விபரங்களைக் கொடுக்கவும்) :————.

மேலே கொடுத்துள்ள விபரங்கள் உண்மையானவையும் செம்மையானவையும் என உறுதிப்படுத்துவதுடன் அவை எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின் தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமனத்தின் பின்னராயின் சேவையிலிருந்து விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் எனவும் அறிவேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :————.

*பொருத்தமற்றவற்றைக் கீறிவிடுக.

10—852—23.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,929

## கல்வி அமைச்சு

### பணி செய்துகாட்டுவோர் பதவி

கல்வி அமைச்சின் கீழ் அல்லது இவ்வமைச்சின் கீழுள்ள திணைக்களங்களில்/நிலையங்களில் சேவைபுரியும் வேலையாளர்களுள், கீழேவிதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வோர்களிடமிருந்து கல்வி அமைச்சின் கீழுள்ள தொழில்நுட்பக் கல்வி நிலையங்களிலுள்ள கீழ்க் காணும் தொழில்களில் பணி செய்துகாட்டுவோர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவ முறையில் தயாரிக்கப்படும் விண்ணப்பங்கள் " நிரந்தரச் செயலாளர், (பொது நிருவாகக் கிளை), கல்வி அமைச்சு, மலாய் வீதி, கொழும்பு 2 " என்ற விலாசத்துக்கு 1970 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 10 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்பட வேண்டும்.

பணி செய்துகாட்டுவோர் தொழில்கள் :—

மரவேலை
உலோக வேலை
கொல்ல வேலையும் காய்ச்சியொட்டுதலும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—இப்பதவிகள் நிரந்தரமானவையும் உபகாரச் சம்பள உரித்துடையனவையுமாகும். விதவைகள் அனுதைகள் உபகாரச் சம்பள நிதிக்குக் கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டும். நியமனம் 3 வருட காலத்துக்குத் தகுதிகாண் முறையில் அமையும். ஏற்கெனவே அரசாங்கத்தின் கீழ் நிரந்தரமானதும் உபகாரச் சம்பள உரித்துடையதுமான ஒரு பதவியை வகிக்கும் ஓர் உத்தியோகத்தர் தெரிவுசெய்யப்படுமிடத்து அவருடைய நியமனம் விதிக்கப்படும் ஒரு காலத்துக்குப்பதில் நியமனமாக அமையும்.

தெரிவு, வாய்மூலப் பரீட்சை, செய்முறைப்பரீட்சை ஆகியவை மூலம் நடைபெறும்.

3. ஒவ்வொருவிண்ணப்பதாரியும் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதாக திருப்திகரமான சான்று காட்ட வேண்டும் :—

(i) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியன்று 21 வயதுக்குக் குறையாதவராயும் 35 வயதுக்கு மேற்படாதவராயுமிருக்க வேண்டும். (ஏற்கெனவே அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது).

(ii) சிறந்த நல்லொழுக்கமும் தேகாரோக்கியமும் உடையவராய் இருக்க வேண்டும்.

(iii) மேற்போந்த 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்களில் ஒன்றில் அல்லது கூடியவற்றில் புறநடையான திறமை வாய்ந்தவராக இருக்க வேண்டும். (பல தொழில்களில் திறமை பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்).

(iv) ஓர் அரசாங்க தொழில்நுட்ப நிலையத்தில் அல்லது அரசாங்க தொழில்நுட்பக் கல்வி நிலையத்தில் அல்லது தொழில்நுட்பத் தரத்தில் குறைந்தபட்சம் 10 வருடங்கள் திறமையான தொழிலாளராகச் சேவை புரிந்திருக்க வேண்டும். (இந்நோக்கத்தின் பொருட்டு, அடிப்படைத் தொழில்நுட்பப் பயிற்சி நிலையத்தில் போதனாசிரியராகப் புரிந்த சேவையும் கணிக்கப்படும்).

(v) அத்தகைய சேவைக் காலத்தில்,

(1) தொழில் தரம்–I ஆம் வகுப்புக்குரிய உச்சிப் படிச் சம்பளத்தில் 1 வருடத்துக்குக் குறையாத காலம் சேவை புரிந்திருக்க வேண்டும் ;

**அல்லது**

(2) தெரிவுத் தரப் பதவி ஒன்றில் சேவை புரிய வேண்டும் (ரூ. 1320–72–2184).

அபேட்சகர்கள், மேலுள்ள உபபந்திகள் (i), (ii), (iii), (iv), (v) ஆகியவற்றில் அல்லது மேலுள்ள (i), (ii), (iii) ஆகியவற்றிலும் கீழ்க்காணும் (vi), (vii) ஆகியவற்றிலும் கொடுக்கப்பட்டுள்ள தகைமைகளைப் பெற்றிருக்க வேண்டும்.

(vi) உரிய தொழிலில், பின்வருவனவற்றுல் நடாத்தப்படும் முழு நேரத் தொழிற் பயிற்சிநெறி ஒன்றினைச் சித்திகரமாகப் பூர்த்தி செய்ததற்கான தராதரப் பத்திரம் பெற்றிருக்க வேண்டும் :

(அ) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி, மருதானை ; அல்லது

(ஆ) யாதேனும் கனிட்ட தொழில்நுட்ப நிலையம் ; அல்லது

(இ) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரித் திணைக்களம் ; அல்லது

(ஈ) சமமான அல்லது உயர்ந்த தகைமைகள் பெற்றிருக்க வேண்டும்.

(vii) உரிய தொழிலில் 5 வருட செயல்முறை அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

4. இப்பதவிக்குரிய திரட்டிய வருடாந்தச் சம்பள அளவுத்திட்டம் பின்வருமாறு :—

ரூ. 4,152—144 × 8—5,304 (அடிப்படைச் சம்பள அளவுத்திட்டம் ரூ. 1,860—120 × 8—2,820).

5. தகைமையுடைய அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் தத்தம் பகுதித் தலைவர்கள் மூலம் அனுப்பப்பட வேண்டும். விதிக்கப்படும் திகதிக்குப் பின் இக்காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளப்படும் இத்தகைய விண்ணப்பங்கள், விதிக்கப்பட்ட திகதியன்று அல்லது அதற்கு முன்னர் அவை உரிய பகுதித் தலைவரால் பெற்றுக் கொள்ளப்பட்டனவென்றும்

நியாயமான காரணங்களைக் காட்டி அவற்றை ஏற்றுக்கொள்ளும்படி அப்பகுதித் தலைவர் சிபார்சு செய்தாலன்றி, ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

6. அபேட்சகர்களைத் தெரிவு செய்யும் விடயத்தில் இவ்வமைச்சின் கீழுள்ள தொழில்நுட்பக் கல்வி நிலையங்களிலுள்ள வேலையாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். அவர்களுள் தகுதியுடைய அபேட்சகர்கள் **இல்லாதவிடத்து** இவ்வமைச்சிலுள்ள திணைக்களங்களிலுள்ள விண்ணப்பதாரிகளிலிருந்து தெரிவு நடாத்தப்படும்.

7. விண்ணப்பதாரிகள், வேண்டப்படும் நேரம் பின்வரும் சாதனங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் :—

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (**மூ. கு.**—சமயதீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது).

(ஆ) பெற்றுள்ள அதியுயர்ந்த கல்வித் தராதரப் பத்திரமும் உயர் தொழிற் தராதரப் பத்திரங்களும்.

(இ) செயல்முறை அனுபவத்தை நிரூபிக்கும் அத்தாட்சிப் பத்திரம்.

8. விண்ணப்பங்களும் ஏனைய உரிய சாதனங்களேனும் கடிதங்களேனும் இவ்வமைச்சின் நிரந்தரக் காரியதரிசியின் விலாசத்துக்கே அனுப்பப்பட வேண்டும். எக்காரணத்தையிட்டும் அவைகள் எவ்வுத்தியோகத்தரினதும் சொந்தப் பெயருக்கு அனுப்பப்படலாகா.

9. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ம் பாகம் II ம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

10. சகல விண்ணப்பங்களும் பெற்றுக் கொள்ளப்பட்டதும் அவை பெற்றுக் கொள்ளப்பட்டதாக விண்ணப்பதாரிகள் அறிவிக்கப்படுவார்கள். அத்தகைய அறிவித்தலை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் பெறத்தவறும் விண்ணப்பதாரிகள், கல்வி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு அது பற்றி உடனே அறிவிக்க வேண்டும். இவ்வேற்பாட்டின் பிரகாரம் ஒழுகத்தவறும் விண்ணப்பதாரி, தனது உரிமை சீர்தூக்கப்படுவதற்கான உரித்தை இழப்பார்.

நிரந்தரக் காரியதரிசி,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
1970 ம் ௵ ஒக்ரோபர் மீ 16 ந் உ.

## மாதிரி விண்ணப்பப் படிவம்

**கல்வி அமைச்சு**

**பணி செய்துகாட்டுவோர் பதவி**

(தொடரெண் : பொ. நி/5)

1. முழுப்பெயர் (தெளிவான எழுத்துக்களில்) : ————.

2. தபால் விலாசம் : ————.
(விலாசத்தில் ஏற்படும் யாதேனும் மாற்றம் உடனே அறிவிக்கப்பட வேண்டும்).

3. சாதியம் : ————.
(வம்சாவழி காரணமாகவா பதிவு காரணமாகவா இலங்கையர் எனக் குறிப்பிடுக. பதிவு காரணமாக நீர் இலங்கைப் பிரசையாயின் பிரசாவுரிமைப் பத்திரத்தின் தொடர்பிலக்கத்தையும் திகதியையும் குறிப்பிடுக).

4. (அ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியன்று உள்ளபடி வயது : வரு.————. மா.————. நாள்————.
(ஆ) பிறந்த திகதி : வரு.————. மா.————. நாள்————.
(பிறப்புச் சாட்சிப் பத்திரத்தின் பிரதியை இணைக்கவும்).

5. பின்வருவோர் பிறந்த இடம் :—
(அ) விண்ணப்பதாரி : ————.
(ஆ) விண்ணப்பதாரியின் தகப்பன் : ————.
(இ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பாட்டன் : ————
(ஈ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பூட்டன் : ————.

6. (அ) விவாகம் செய்தவரா, செய்யாதவரா, தாரமிழந்தவரா ? :—.
(ஆ) விவாகம் செய்தவராயின், பின்வரும் விபரங்களைக் கொடுக்க :—
(i) விவாகத் திகதி : ————.
(ii) பிள்ளைகளின் எண்ணிக்கை : ————.

7. (அ) 15 வயது தொடக்கம் படித்த பாடசாலைகள், கல்லூரிகள், நிலையங்கள் :—

| பொதுக் கல்வி | | | உயர்தொழில்/தொழில்நுட்பக் கல்வி (யாதேனும் படித்திருப்பின்) | | |
|---|---|---|---|---|---|
| பாடசாலை அல்லது கல்லூரி | தொடக்கம் | வரை | நிலையம் | தொடக்கம் | வரை |
| | | | | | |

(ஆ) கடைசிப் பாடசாலையிலிருந்து விலகிய திகதி : ————.

8. கல்வித் தகைமைகளும் கடைசியாகச் சித்தி எய்திய பரீட்சையும் அதன் திகதியும் :—
(அ) சிங்களத்தில் : ————.
(ஆ) ஆங்கிலத்தில் : ————.
(இ) தமிழில் : ————.

9. உயர்தொழில் தகைமைகளும் தொழில் நுட்பத் தகைமைகளும் அல்லது இவைகளில் யாதேனும்—(யாதேனும் பெற்றிருப்பின்) : ————.
(அ) அவைகள் பெற்ற திகதிகளும், (ஆ) படித்த நிலையங்களும் : ————.

10. வாசிப்பு, எழுத்து, சம்பாஷணை, பேச்சு மொழிபெயர்ப்பு ஆகியவற்றில் பின்வரும் மொழிகளில் பெற்றுள்ள தேர்ச்சி :
(அ) சிங்களம் : ——. (ஆ) தமிழ் : ——. (இ) ஆங்கிலம் ——.

11. நீர் மிக விசேட திறமை பெற்றுள்ள தொழில்கள் (அறிவித்தலின் 3 (iii) ஆம் பந்தியைப் பார்க்க) : ————.

12. விசேட தகைமைகள் (அறிவித்தலில் விதிக்கப்பட்டுள்ள விசேட தகைமைகளை/அனுபவத்தை அல்லது இவ்விரண்டினையும் பெற்றிருக்கிறீரா ? அங்ஙனமாயின், அவை பற்றிய விபரங்களையும் அவை பெற்றுக்கொள்ளப்பட்ட திகதிகளையும் குறிப்பிடுக) : ————.

13. சட்டமுறை நீதிமன்றத்தில் யாதேனும் குற்றவியல் தவறுக்காக உம்மீது குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டதா ? அங்ஙனமாயின் (அ) தீர்ப்பு அளிக்கப்பட்ட திகதி, (ஆ) வழக்கு எண், (இ) குற்றத் தீர்ப்பின் தன்மை ஆகியவற்றைக் குறிப்பிடுக : ————.

14. நீர் பணமுட்டு அற்றவரா ? பணமுட்டு உமக்கு இருப்பின், எவ்வளவுக்கு ? : ————.

15. தற்போது வகிக்கும் உத்தியோக விபரங்கள் (நிலையம்/பகுதி) :——.
(i) பதவிப் பெயரும் பதவியின் தரமும் : ————.
(ii) இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதா/தற்காலிகமானதா/சமயோசிதமா ? : ————.
(iii) தற்போதைய (சகாயப் படிகள் உட்படாத) சம்பளமும் சம்பள விகிதமும் : ————.
(iv) அடுத்த சம்பள உயர்ச்சித் திகதி : ————.

16. விண்ணப்பிக்கும் தொழில் : ————.

இவ்விண்ணப்பப் படிவத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதியளிக்கின்றேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின், தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமிக்கப்படுதற்குப் பின்னராயின் எவ்வித நஷ்ட ஈடின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என அறிவேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

இடம் : ————.

திகதி : ————.

**திணைக்களத் தலைவரின் அத்தாட்சிப் பத்திரம்**

எனது இல :————.
உமது இல :பொ. நி/5

நி.கா/க. அ.

இவ்விண்ணப்பம், விண்ணப்பங்கள் முடிவடையும் திகதிக்கு முன்/பின்* இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்பட்டது. இவர் தெரிவு செய்யப்பட்டால் இவரை விட முடியும்/முடியாது.

.......... ஆம் பந்திகளில் கொடுபட்டுள்ள விபரங்கள் சரி/பின்வரும் திருத்தங்களுக்கமையச் சரி.*

..............................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பதவி : ......................

திகதி : ————.

*பொருத்தமற்றதை வெட்டுக.

10–853—23.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,929

---

## ஹம்பாந்தொட்டை மாவட்டத்தில் ஜுலம்பிடிய பிரிவிற்கு பிறப்பு இறப்பும் கிறுவாபத்து வடக்கு பிரிவிற்கு விவாக (பொது) பதிவாளர் பதவி

ஜுலம்பிடிய பிரிவிற்கு பிறப்பு, இறப்புப் பதிவுப் பிரிவிற்குள் நிரந்தரமாக குடியிருப்பவர்கள், அப்பிரிவில் சிலகாலம் வசிக்கின்றவர்கள் அல்லது பொதுமக்களால் அங்கீகரிக்கப்பட்டவர்கள், ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்ப முடிவு திகதியன்று இருபத்தி யொரு வயதிற்கு குறையாதவர்களாயின் மேற்படி பதவிக்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம். அரசாங்க சேவையில் இவ்வயதெல்லை கவனிக்கப்பட மாட்டாது.

2. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய கல்வித்தராதரங்களும் ஏனைய பிற தராதரங்கள், நிபந்தனைகள் ஆகிய விபரங்கள் அடங்கிய அறிவித்தல்கள் இந்த அலுவலகத்திலும் காரியாதிகாரியின் அலுவலகங்களிலும் கிராம சேவையாளர்களின் அலுவலகங்களிலும் உள்ளூராட்சிச் சபை அலுவலகங்களிலும், கிராம நீதிமன்றங்களிலும் தபால் அலுவலகங்களிலும் பொலிஸ் ஸ்தானம், சனசமூக நிலையங்களிலும், பிரசித்தமான வியாபார நிலையங்களிலும் கூட்டுறவுத்தாபன நிலையங்களிலும் இந்த பிரிவிற்குள் இருக்கும் பிரசித்த இடங்களிலும் காரியாலயங்களிலும் பார்வைக்கு வைத்திருக்கப்பட்டிருக்கின்ற அறிவித்தல்களில் அடங்கியுள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும் இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய விண்ணப்பப் பத்திரங்களில் நிரப்புவதோடு 1970 ம் ஆண்டு மார்கழி மாதம் 8 ம் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக எனக்குக் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

எஸ். டப்ளியு. குணவர்தன,
மாவட்டப் பதிவாளருக்காக.

மாவட்டப் பதிவாளர் அலுவலகம்,
ஹம்பாந்தோட்டை,
1970 ம் ஆண்டு ஒக்டொபர் மீ 8 ந் உ.

10–717—23.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,929

---

## ஹம்பாந்தொட்டை மாவட்டத்தில் கஹவத்த கீழ் பிரிவிற்கு பிறப்பு இறப்பும் கிறுவபத்து வடக்கு பிரிவிற்கு விவாக (பொது) பதிவாளர் பதவி

கஹவத்த கீழ் பிரிவிற்கு பிறப்பு இறப்புப் பதிவுப் பிரிவிற்குள் நிரந்தரமாக குடியிருப்பவர்கள், அப்பிரிவில் சிலகாலம் வசிக்கின்றவர்கள், அல்லது பொது மக்களால் அங்கீகரிக்கப்படக்கூடியவர்கள் ஆண், பெண் இரு பாலாரும் விண்ணப்ப முடிவு திகதியன்று இருபத்தியொரு வயதிற்குக் குறையாதவர்களாயின் மேற்படி பதவிக்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம். அரசாங்க சேவையில் இவ்வயதெல்லை கவனிக்கப்பட மாட்டாது.

2. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய கல்வித் தராதரங்களும் ஏனைய பிற தராதரங்கள், நிபந்தனைகள் ஆகிய விபரங்கள் அடங்கிய அறிவித்தல்கள் இந்த அலுவலகத்திலும் காரியாதிகாரியின் அலுவலகங்களிலும் கிராம சேவையாளர்களின் அலுவலகங்களிலும் உள்ளூராட்சிச் சபை அலுவலகங்களிலும் கிராம நீதி மன்றங்களிலும் தபால் அலுவலகங்களிலும் பொலிஸ் ஸ்தானமும் சனசமூக நிலையங்களிலும் பிரசித்தமான வியாபார நிலையங்களிலும் கூட்டுறவுத்தாபன நிலையங்களிலும் இந்தப் பிரிவிற்குள் இருக்கும் பிரசித்த இடங்களிலும் காரியாலயங்களிலும் பார்வைக்கு வைத்திருக்கப்பட்டிருக்கின்ற அறிவித்தல்களில் அடங்கியுள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும் இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய விண்ணப்பப் பத்திரங்களில் நிரப்புவதோடு 1970 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 30 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக எனக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

எஸ். டப்ளியு. குணவர்தன,
மாவட்டப் பதிவாளருக்காக.

மாவட்டப் பதிவாளர் அலுவலகம்,
ஹம்பாந்தோட்டை,
1970 ம் ஆண்டு ஒக்டோபர் மீ 8 ந் உ.

10–719—23.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,929

---

## ஹம்பாந்தொட்டை மாவட்டத்தில் வலஸ்முல்ல கீழ் பிரிவிற்கு பிறப்பு இறப்பும் கிருவாபத்து வடக்கு பிரிவிற்கு விவாக (பொது) பதிவாளர் பதவி

வலஸ்முல்ல கீழ் பிரிவிற்கு பிறப்பு, இறப்புப் பதிவுப் பிரிவிற்குள் நிரந்தரமாக குடியிருப்பவர்கள், அப்பிரிவில் சிலகாலம் வசிக்கின்றவர்கள், அல்லது பொது மக்களால் அங்கீகரிக்கப்படக்கூடியவர்கள், ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்ப முடிவு திகதியன்று இருபத்தியொரு வயதிற்கு குறையாதவர்களாயின் மேற்படி பதவிக்கு விண்ணப்பித்து கொள்ளலாம். அரசாங்க சேவையில் இவ்வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.

2. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய கல்வித்தராதரங்களும் ஏனைய பிறதராதரங்களும் நிபந்தனைகள் ஆகிய விபரங்கள் அடங்கிய அறிவித்தல்கள் இந்த அலுவலகத்தின், காரியாதிகாரியின் அலுவலகத்திலும் கிராம சேவையாளர்களின் அலுவலகத்திலும் உள்ளூராட்சிச்சபை அலுவலகத்திலும் கிராம நீதி மன்றங்களிலும் தபால் அலுவலகங்களிலும் பொலிஸ் ஸ்தானம், சனசமூக நிலையங்களிலும் பிரசித்தமான வியாபார நிலையங்களிலும் கூட்டுறவுத்தாபன நிலையங்களிலும் இந்த பிரிவிற்குள் இருக்கும் பிரசித்த இடங்களிலும் காரியாலயங்களிலும் பார்வைக்கு வைத்திருக்கப்பட்டிருக்கின்ற அறிவித்தல்களில் அடங்கியுள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும் இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய விண்ணப்பப் பத்திரங்களில் நிரப்புவதோடு 1970 ம் ஆண்டு மார்கழி மாதம் 4 ம் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக எனக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

எஸ். டப்ளியு. குணவர்தன,
மாவட்டப் பதிவாளருக்காக.

மாவட்டப் பதிவாளர் அலுவலகம்,
ஹம்பாந்தோட்டை,
1970 ம் ஆண்டு ஒக்டோபர் மீ 8 ந் உ.

10–718—23.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,929

**மட்டக்களப்பு பெரும்பகுதியில் கோட்டைக்கல்லாறு பிறப்பு இறப்புப் பிரிவுக்கும், மண்முனை தென் எருவில் போரதீவுப் பற்றுக்களின் பிரிவுக்கும் விவாக (பொது) பதிவுகாரர் பதவி**

கோட்டைக்கல்லாறு பிறப்பு, இறப்பு பதிவுப் பிரிவிற்குள் நிரந்தரமாக குடியிருப்பவர்கள், அப்பிரிவில் சிலகாலம் வசிக்கின்றவர்கள், அல்லது பொது மக்களால் அங்கீகரிக்கப்படக்கூடியவர்கள், ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பமுடிவு திகயன்று இருபத்தொரு வயதுக்குக் குறையாதவர்களாயின் மேற்படி பதவிக்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம். அரசாங்க சேவையில் கடமையாற்றுபவர்களைப் பொறுத்தளவில் இவ்வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.

2. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய கல்வித்தராதரங்களும், ஏனைய பிறதராதரங்கள், நிபந்தனைகள் ஆகிய விபரங்கள் அடங்கிய அறிவித்தல்கள், இந்த அலுவலகத்திலும், காரியாதிகாரியின் அலுவலகங்களிலும், கிராம சேவையாளர்களின் அலுவலகங்களிலும், உள்ளூராட்சிச் சபை அலுவலகங்களிலும், கிராம நீதிமன்றங்களிலும், தபால் அலுவலகங்களிலும், பொலிஸ் ஸ்தாபனம், சனசமூக நிலையங்களிலும், பிரசித்தமான வியாபார நிலையங்களிலும், கூட்டுறவுதாபன நிலையங்களிலும் இந்தப் பிரிவுக்குள் இருக்கும் பிரசித்த இடங்களிலும், காரியாலயங்களிலும் பார்வைக்கு வைத்திருக்கப்பட்டிருக்கின்ற அறிவித்தல்களில் அடங்கியுள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும் இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக் கூடிய விண்ணப்பப்பத்திரங்களில் நிரப்புவதோடு 1970 ம் ஆண்டு நவெம்பர் மாதம் இருபத்தேழாந் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக எனக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

தா. பாலசந்திரன்,
பெரும்பகுதிப் பதிவுகாரர் (மேலதிக).

மட்டக்களப்பு,
பெரும்பகுதிப் பதிவுகாரர் அலுவலகம்,
1970 ம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 11 திகதி.

10-794—23.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,929

---

**ஆட்டுப்பட்டித் தெரு "எ" தர உபஅஞ்சல் அதிபருக்கான பதவி**

கொழும்பு 13, ஆட்டுப்பட்டித்தெரு உபஅஞ்சல் அதிபர் பதவிக்காக விண்ணப்பம் கோரப்படுகிறது. ஆகக்குறைந்த மாதாந்த அலவன்சு ரூபா 75/- ஆகும்.

1. விண்ணப்பதாரர் இலங்கையராயும், 23.11.70 ந் திகதியில் 21 வயதுக்கும் 45 வயதுக்கும் உட்பட்டவராயும் இருத்தல் வேண்டும். இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்.

2. மாநகரசபைப் பிரதேசத்தில் நிரந்தர வாசியாக 10 வருடத்திற்குக் கூடுதலாயும் இருத்தல் வேண்டும். உபஅஞ்சல் அலுவலகம் வீற்றிருக்கும் வட்டாரத்தில் அல்லது அடுத்த வட்டாரங்களில் உள்ள வாசியாயிருப்பின் முன்னுரிமை கொடுக்கப்படும்.

3. சி.பா.த.ப./பொ.த.ப. (சாதாரணம்) பரீட்சையில் குறைந்தளவு 3 பாடங்களுடன் சிங்களம்/தமிழ் பாஷை, கணிதம்/ஆரம்ப கணிதம் ஆகியனவற்றுடன் சித்தியடைந்தவராய் இருத்தல் வேண்டும்.

4. கொழும்பு 13, ஆட்டுப்பட்டித்தெரு உபஅஞ்சல் அலுவலகத்தை அமைப்பதற்காக விண்ணப்பதாரர் ஒரு கட்டிடத்தை வாடகையின்றி வழங்குதல் வேண்டும்.

5. கொழும்பு 1, எச்சலன் சதுர்க்கம், 5 ம் கட்டிடத்திலுள்ள (மேல்தென்) அஞ்சல் அலுவலகங்களின் பெரும்பாக அத்தியட்சரிடமிருந்து பெற்ற அச்சிட்ட படிவங்களில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு, பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்பங்கள் அவரை 23.11.70 ம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ அடையுமாறு அனுப்பி வைத்தல் வேண்டும்.

மேலதிக விபரங்கள் அஞ்சல் அலுவலகங்களின் பெரும்பாக அத்தியட்சரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

வேணண் அபயசேகரா,
அஞ்சல் அதிபர் நாயகமும் தந்திப்போக்குவரத்து அதிபரும்.

10-738—23.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,929

---

**பூகற்ப ஆராய்ச்சித் திணைக்களம்**

**தொழில்நுட்ப உதவியாளர் பதவி**

பூகற்ப ஆராய்ச்சித் திணைக்களத்திலுள்ள தொழில்நுட்ப உதவியாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் கீழ்க் கொடுக்கப்பட்ட படிவத்தில், அதிபர், பூகற்ப ஆராய்ச்சித் திணைக்களம், 48, ஸ்ரீ ஜினரத்தின வீதி, கொழும்பு 2 என முகவரியிட்டு 1970 நவம்பர் 24 ம் திகதியிலன்றோ அல்லது அதற்கு முன்போ கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

2. **சேவை நியதிகளும் நிபந்தனைகளும்** :—இப்பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளத்திற்குட்பட்டதுமாகும். ஆனால் முதல் மூன்று வருட காலமும் தகுதிகாண் நிலையில் நியமிக்கப்படுவர்.

தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் பூகற்ப ஆராய்ச்சித் திணைக்கள ஆணையாளரால் மேற்கொள்ளப்படும் பயிற்சியைப் பெறுமாறு வேண்டப்படுவார்.

3. **சம்பளம்** :—இப்பதவிக்குரிய திரட்டிய சம்பள அளவுத்திட்டம் பின்வருமாறு : ரூபா 5736, 6 × 144, 8 × 180 ம், 6 × 240—ரூபா 9,480 வரை உயர்வதுடன் ரூபா 6,780 ரூபா 7,500 ம் ரூபா 8,280 க்கு முன் வினைத்திறமைகாண் தடைகள் உண்டு.

தெரியப்பட்ட அபேட்சகரின் தகுதியையும், அனுபவத்தையும் கவனித்து திறைசேரியின் ஆலோசனையுடன் அவருக்கேற்ற சம்பளத் திட்டத்தில் நியமிக்கப்படுவர்.

4. **தேவையான தகைமைகள்** :—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகளையுடையவர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்டுதல் வேண்டும்:—

(அ) அபேட்சகர் சிறந்த நற்குணமுடையவராயும் உடல் நலமுடையவராயும் இருத்தல் வேண்டும்.

(ஆ) வம்சாவழியினாலோ அல்லது பதிவினாலோ இலங்கைப் பிரஜையாக இருக்க வேண்டும்.

(இ) 1970 நவெம்பர் 24 ம் திகதியில் 20 வயதிற்குட்படாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க சேவையில் உள்ளவர்களிடமிருந்து பெறும் விண்ணப்பங்கள் வயதுக் கட்டுப்பாடு வேற்றுமையின்றிக் கவனிக்கப்படும்).

(ஈ) அங்கீகாரம் பெற்ற ஒரு பல்கலைக் கழகத்தில் விஞ்ஞானப் பட்டதாரிப் (பொது) பரீட்சையில் தூய அல்லது பிரயோக கணிதத்திலோ அல்லது கணிதத்துடன் பௌதிகவியல் அல்லது இரசாயனவியல் பாடங்களுடன் சித்தியடைந்திருத்தல் வேண்டும். புவிவரலாற்றியலை ஒரு பாடமாக எடுத்துச் சித்தியடைந்திருந்தால் அல்லது பரிசோதனைச்சாலை அனுபவமும் புவியியலில் அல்லது அதையொத்த விஞ்ஞானத்துறையில் தொழில்நுட்ப அனுபவமும் இருப்பவர்களுக்குச் சலுகை அளிக்கப்படும்.

(உ) பூகற்ப ஆராய்ச்சித் திணைக்களத்தில் கடமையாற்றும் வெளிக்கள உதவியாளரும், பரிசோதனைச்சாலை உதவியாளரும் 15 வருடச் சேவைக்குக் குறையாமல் கடமையாற்றியிருந்தால் அவர்களின் விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்படும்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றையும் காட்டுமாறு கேட்கும்பொழுது சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) பிறப்புச் சான்றிதழ். (**முக்கிய குறிப்பு** : சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது).

(ஆ) பல்கலைக் கழகப் பட்டம் அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ்.

(இ) குணச் சான்றிதழ் இரண்டு. இவற்றிலொன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாக இருத்தல் வேண்டும்.

(ஈ) உயர் தொழிலுக்குரிய சான்றிதழ் அல்லது தொழில் நுட்பத் தகைமைச் சான்றிதழ்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

**குறிப்பு**.—(1) சாதனங்களையாயினும் அவற்றின் நகல்களையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது.

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும் பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டாது.

6. திணைக்கள ஆணையாளர்களுக்கூடாக அனுப்பப்பட்ட விண்ணப்பங்கள் குறித்த திகதிக்குப் பின் இங்கு கிடைத்தால் அவ்விண்ணப்பங்கள் அத்திணைக்கள ஆணையாளரிடம் குறித்த திகதிக்கு முன் கிடைத்தது என்றும், அதை ஏற்குமாறு தாமதத்திற்குத் தகுந்த நியாயம் காட்டத் தவறினால் அவ் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

7. அபேட்சகர்கள் இத் திணைக்களத்தில் குறித்த நேரம், திகதியில் நேர்முகப் பரீட்சைக்கு வருமாறு வேண்டப்படுவர். இதற்காகிய பயணச் செலவு எதுவும் கொடுக்கப்படமாட்டாது.

8. விண்ணப்பங்களை திணைக்கள ஆணையாளர், பூகற்ப ஆராய்ச்சித் திணைக்களம் என முகவரியிட்டு அனுப்பவேண்டுமேயன்றி இத் திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக் கூடாது.

9. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ம் பாகம் II ம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றைப் பார்க்க.

எல். ஜே. டீ. பர்னாண்டோ,
ஆணையாளர்,
பூகற்ப ஆராய்ச்சித் திணைக்களம்.

பூகற்ப ஆராய்ச்சித் திணைக்களம்,
48, ஸ்ரீ ஜினரத்தின பாதை,
கொழும்பு 2,
1970 ௵ ஒற்றோபர் ௴ 15 ந உ.

## மாதிரிப் படிவம்

### பூகற்ப ஆராய்ச்சித் திணைக்களம்
### தொழில் நுட்ப உதவியாளர் பதவி

1. முழுப் பெயர் :————.
(உறுப்பெழுத்தில்)
(அ) பெயர் :————.
(ஆ) மறு பெயர் :————.
2. தபால் விலாசம் :————.
(விலாச மாற்றம் ஏற்பட்டால் உடன் அறிவிக்கப்படல் வேண்டும்.)
3. (அ) பிறந்த திகதி :————.
(ஆ) 1970 நவெம்பர் 24 ம் திகதியில் வயது :————.
4. தேசிய இனம் :————.
(வம்சாவழி அல்லது பதிவுப் பிரஜையா எனக் குறிப்பிடுக. பதிவுப் பிரஜையாயின் பதிவுப் பத்திர தொடர்பு இலக்கத்தையும் திகதியையும் குறிப்பிடுக.)
5. பிறந்த இடம் :—
(அ) விண்ணப்பகாரர் :————.
(ஆ) தகப்பன் :————.
(இ) தகப்பன் வழிப் பேரன் :————.
(ப) தகப்பன் வழிப் பூட்டன் :————.
(விண்ணப்பகாரர் இலங்கையில் பிறந்திருந்தால் (ஆ) அல்லது (இ) யும் (ஈ) யும் (அ) வோடு நிரப்புக. அவர் இலங்கையில் பிறக்காவிடின் (ஆ) யும் (இ) யும் அல்லது (இ) யும் (ஈ) யும் (அ) வோடு நிரப்புக.)
6. விண்ணப்பகாரர் விவாகமானவரா ? தனிப்பட்டவரா ? தாரமிழந்தவரா ? :————.
7. கீழ்க்காணும் தகைமைகளைப் பெறுவதற்குப் படித்த பாடசாலைகளிலும், கல்லூரிகளிலும் சேர்ந்த திகதியும் விலகிய திகதியும் :—
(அ) பொதுத் தராதரம் :————.
(ஆ) உயர் தொழிற் கல்வி :————.
8. விளையாட்டுத் துறையில் நீர் பெற்ற சிறப்புக்கள் (ஏதும் இருப்பின்) : ————.
9. (அ) நீர் கடன் தொல்லை இல்லாதவரா ? இருக்கும் பட்சத்தில் கடன் பொறுப்புக்களின் அளவுகள் :————.
(ஆ) சட்ட நீதிமன்றங்களில் ஏதாவது குற்றப் பாதகத்திற்குக் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறீரா ? அப்படியானால் வழக்கு இலக்கத்தை எடுத்துக் காட்டி, திகதிகளோடு முழு விபரங்களையும் குறிக்குக :————.
10. பாடசாலைக் கல்வி, உயர் தொழிற் கல்வி, நுண்தொழிற் கல்வித் தகைமைகள் :————.
(பல்கலைக் கழகத்துச் சகல பட்டங்கள், திறமைகள், உயர் தொழிற் கல்வி/அல்லது நுண்தொழிற் தகைமைகள் முதலியவற்றின் விபரங்களைச் சித்தியெய்திய திகதியுடன், வகுப்புத் தரம் ஏதாவது பெற்றிருந்தால், எடுத்த பாடங்கள், கல்வித்தாபனப் பெயர்கள் ஆகியனவும் தயவுசெய்து தருக).
11. இப்போதைய தொழிலும், முன்பேதேனும் பதவிகளிலிருந்தால் அவ்விபரங்களையும் தருக :————.
12. விசேட உரிமைகள், தகைமைகள், பயிற்சிகள், அனுபவங்கள் ஏதும் இருந்தால் அவைகளின் விபரங்களைத் தருக :————.
13. மூன்று நற்சான்றுப் பத்திரங்கள் அளிக்கக்கூடிய தகைமையாளரின் பெயர்களையும், விலாசங்களையும், பதவிப் பெயர்களையும் தருக :—
1.
2.
3.

இந்த விண்ணப்பப் பத்திரத்தில் என்னால் தரப்பட்டிருக்கும் விபரங்கள் யாவும் உண்மையானவையென்றும் சரியானவையென்றும் நான் அத்தாட்சிப்படுத்துகிறேன். இதனுள் அடங்கியிருக்கும் விபரங்கள் எவையேனும் பொய்யானவை, சரியற்றவையென்று தெரிவு செய்யப்படுமுன் அறிந்தால் தகுதியற்றவனாகக் காணப்படுவேனென்றும்; நியமனம் பெற்ற பிற்பாடு சரியற்றவையென்று கண்டு பிடிக்கப்பட்டால் நட்ட ஈடு எதுவுமின்றிப் பதவியால் நீக்கப்படுவேனென்றும் நான் அறிந்திருக்கிறேன்.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

இடம் :————.
திகதி :————.

10–815—23.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,929

---

## அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்

இக் கூட்டுத்தாபனத்தில் கீழ்க்காணும் பதவிக்கான விண்ணப்பங்கள் தேவையெனக் கருதப்படும் தகுதிகள் கொண்ட இலங்கைப் பிரசைகளிடமிருந்து கீழ்க் கையொப்பமிடும் உத்தியோகத்தரால் ஏற்றுக் கொள்ளப்படும்.

### சுருக்கெழுத்து/தட்டெழுத்தாளர் தரம் II (ஆங்கிலம்)

**சம்பள விகிதம்** : மாதமொன்றிற்கு எல்லாம் உட்பட ரூபா 310—12 × 10—ரூபா 430.

**வயதெல்லை** : 5.11.70 அன்று 18 வயதுக்கும் 30 வயதுக்கும் உட்பட்டவராய் இருத்தல் வேண்டும். அரசாங்க அல்லது கூட்டுத்தாபனச் சேவையிலுள்ளவர்களை மேற்கூறிய வயதெல்லை பாதிக்காது.

**கல்வித்தகைமை, அனுபவம் மற்றும் தேவைகள்** : சி. பா. த. ப அல்லது க. பொ. த. ப. பரீட்சையில் ஒரே முறையில் ஆறு பாடங்களில் தேர்ச்சி பெற்றவரும், மூன்று வருடங்களுக்குக் குறையாத அனுபவம் பெற்றவருமான ஒருவர். க. பொ. த. ப. (சாதாரண நிலை) பரீட்சையில் ஆங்கில பாடத்தில் திறமையாகத் தேர்ச்சியடைந்தவர்களுக்கு விசேட சலுகை காட்டப்படும்.

வேகவிகிதங்கள் பின்வருமாறு :—

ஆங்கிலச் சுருக்கெழுத்து : — நிமிஷமொன்றிற்கு 80
ஆங்கிலத் தட்டெழுத்து : — நிமிஷமொன்றிற்கு 40

இக்கூட்டுத்தாபனக் காரியாலயத்தில் பெறக்கூடிய விண்ணப்பப் பத்திரங்களில் நிரப்பப்பட்ட விண்ணப்பங்கள் தலைவர், அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம் 2 பி, டி பொன்சேகா வீதி, கொழும்பு 5 என்ற முகவரிக்குப் பதிவு செய்யப்பட்ட கடிதவுறைகளில் 5.11.70 அன்று அல்லது அதற்கு முன்பு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

விண்ணப்பங்களைக் கொண்ட கடிதவுறைகளின் மேல் இடது பக்கத்தில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிக்கப்பட வேண்டும்.

நேர்முகமாக விண்ணப்பங்களைப் பெற விரும்புவர்கள் சாதாரண அலுவல் நேரங்களில் இக் காரியாலயத்திற்கு வந்து பெற்றுக்கொள்ளலாம். மற்றவர்கள் தமது விலாசமிடப்பட்டு, முத்திரை ஒட்டப்பட்ட கடிதவுறைகளைத் (அளவு 9″ × 4″) தலைவர் அவர்களுக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப் பட மாட்டாது.

தலைவர்,
அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்.

2பி, டி பொன்சேகா வீதி,
கொழும்பு 5,
16.10.1970.

10–837—23.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,929

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### பகுதிநேர செயல்முறை உதவியாளர் பதவிகள்—வர்த்தக சேவை

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் பகுதிநேர செயல்முறை உதவியாளர் பதவிகளுக்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரர்கள் கொழும்பு மாநகரசபை எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவராகவும், எதாவது உத்தியோகத்திலோ அல்லது தொழிலிலோ ஈடுபடாதவராகவும் இருக்கவேண்டும். தெரிவு செய்யப்படுபவர்களுக்கு சமயாசமய அடிப்படையில் உத்தியோகம் வழங்கப்படும். பணிபுரியும் ஒவ்வொரு மணித்தியாலத்திற்கும் 2 ரூபா 25 சத விகிதப்படி ஊதியம் வழங்கப்படும். ஒரு நாளைக்கு ஆகக்கூடிய ஊதியமாக 18 ரூபா வழங்கப்படும். பிரயாணச் செலவோ அல்லது வேறெந்தவிதமான படியோ கொடுக்கப்படமாட்டாது.

2. தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்தி குறுகியகால பயிற்சியொன்றை மேற்கொள்ளுமாறு கேட்கப்படுவார். பயிற்சிக்காலத்தின்போது எந்த விதமான படியும் வழங்கப்படமாட்டாது.

3. பகுதிநேர செயல்முறை உதவியாளர் பதவிக்கு தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்திகள் கூட்டுத்தாபனத்தின் கிரமமான ஊழியர்களாகக் கணிக்கப்படமாட்டார்கள். ஆனால், அவர்களின் சேவை தேவைப்படுகின்ற போது அழைக்கப்படுவார்கள்.

4. விண்ணப்பதாரிகள் 18 வயதுக்கு மேற்படாதவராக இருக்க வேண்டும். கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பத்திரப் பரீட்சையில் ஒரே தடவையில் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அல்லது அதற்குச் சமமான உயர்ந்த பரீட்சையில் பாஷை ஒன்றில் திறமைச் சித்தியுடன் சித்தியடைந்திருத்தல் வேண்டும். விண்ணப்பதாரிகள் பின்வரும் மேலதிக தகைமைகளை உடையவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

(i) அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிலையமொன்றில் சங்கீதப் பட்டதாரியாகவோ அல்லது,
சங்கீதத்தில் டிப்ளோமா பட்டம் பெற்றவராகவோ இருத்தல் வேண்டும்.

அல்லது,

(ii) தயாரிப்பாளர் அல்லது நடிகன் என்ற முறையில் நாடகம் தயாரிப்பதிலுள்ள அனுபவமும் அதன் மீதுள்ள அக்கறையும்,

அல்லது,

(iii) பத்திரிகையாளராக 5 வருட அனுபவம்.

5. இந்த அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தின் பிரகாரம் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு, 1970 ம் ஆண்டு நவம்பர் மாதம் 5 ஆம் திகதிக்கு முன்பாக, மா—அதிகாரி, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், கொழும்பு 7 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மூலையில் " பகுதிநேர செயல்முறை உதவியாளர் பதவி " என தெளிவாகக் குறிக்கப்படல் வேண்டும்.

6. விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது.

16, ஒக்டோபர் 1970.
கொழும்பு 7.

சுசில் முனசிங்ஹ,
மா—அதிகாரி.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

#### பகுதிநேர செயல்முறை உதவியாளர் பதவி

1. முழுப் பெயர் : ————.
2. நிரந்தரமான முகவரி : ————.
3. பிறந்த இடமும் திகதியும் : ————.
(பிறப்புச் சாட்சிப் பத்திரப் பிரதி இணைக்கப்படல் வேண்டும்).
4. 5.11.70 இல் வயது :—.
வருடம் : ————. மாதம் : ————. நாட்கள் : ————.
5. தேசிய இனம் : ————.
6. கல்வித் தகைமைகள் : ————.
(தராதரப் பத்திரப் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்).
7. வேறு தகைமைகளும், அனுபவங்களும் : ————.
(4 ஆவது பந்தி (i), (ii), (iii) ஆகியவற்றில் குறிப்பிட்டுள்ளதன் பிரகாரம்)
8. மொழித் தேர்ச்சித் தராதரம் :—
(அ) சிங்களம் : ————.
(ஆ) தமிழ் : ————.
(இ) ஆங்கிலம் : ————.
9. ஒலிபரப்புத்துறையில் அனுபவமும், வேறு எதாவது விசேட தகைமைகளின் விபரங்களும் : ————.
(தராதரப் பத்திரப் பிரதி இணைக்கப்படுதல் வேண்டும்).
10. நற்சான்றிதழ்கள் பெறப்பட்டவர்களின் பெயர்களும் முகவரிகளும் : ————.
(நற்சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்).

இவ்விண்ணப்பப்படிவத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும், சரியானவையுமென இத்தால் உறுதியளிக்கின்றேன். இங்கு கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்னராயின் தகுதியற்றவராகக்கப்படுவதற்கும், நியமிக்கப்பட்டதற்குப் பின்னராயின் எவ்வித நஷ்ட ஈடின்றியும் விலக்கப்படுவதற்கும் நான் பாத்திரமாவேன் எனவும் அறிவேன்.

..........................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :————.

10–870—23.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,929

---

## நெல் விற்பனைச் சபை

### கணக்காளர், உதவிக்கணக்காளர்கள், காரியதரிசி, சட்ட உதவியாளர்' ஆலைகள் எந்திரவியலாளர், ஆலைகள் உதவி எந்திரவியலாளர், உதவி தொழில்நுட்பனர் மற்றும் சுருக்கெழுத்தாளர் (ஆங்கிலம், சிங்களம்) ஆகிய பதவிகள்

குறிக்கப்பட்ட தகைமைகள் உடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் நெல் விற்பனைச் சபையில் பதவிகள் வகிப்பதற்கு, ஆலோசனை செய்வதற்காக வரவேற்கப்படுகின்றன :—

1. **கணக்காளர் :** 5 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவமுடைய (சாட்டேட்) கணக்காளர்.

**வயது.**—விண்ணப்ப முடிவுதிகதியில் 45 வருடங்களுக்கு மேற்படாதவர்.

**வேதனம்.**—கலந்துகொள்ளப்பட வேண்டியது. விண்ணப்பதாரர் தாம் எதிர்பார்க்கும் வேதனம் எவ்வளவு என்பதைக் குறிப்பிடல் வேண்டும்.

2. **உதவிக் கணக்காளர் :** (சாட்டேட்) கணக்காளர் கழக இடைக்காலப் பரீட்சையில் சித்தியெய்திய சான்றிதழ் பெற்றதுடன் அனுபவம் கூடியவர்கள் விரும்பப்படுவார்கள்.

**வயது.**—25–35 வருடங்கள்.

**வேதனம்.**—ரூபா. 800.00—45—1315 மாதத்திற்கு.

3. **காரியதரிசி சட்ட உதவியாளர் :** 5 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவமுடைய நியாய துரந்தரர் அல்லது பிரக்கிராசி 10 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவமுடையவர். சட்ட சம்பந்தமான எவ்வகையான துறையிலும் குறிப்பாக தொழிலாளர் மனு சம்பந்தமான வேலைகள்.

**வயது.**—45 வருடங்களுக்கு மேற்படாதவர்.

**வேதனம்.**—ரூபா. 1250.00—50—1750 மாதத்திற்கு.

4. **ஆலை எந்திரவியலாளர் :** அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழக பொறியியல் எந்திரவியலாளர் பட்டதாரியும் 5 வருடத்திற்கு குறையாத அனுபவமுள்ளவரும்.

**வயது.**—45 வருடத்திற்கு மேற்படாதவர்.

**வேதனம்.**—கலந்துகொள்ளப்பட வேண்டியது.

5. **உதவி ஆலை எந்திரவியலாளர் :** அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பொறியியல் எந்திரவியலாளர் பட்டதாரி.

**வயது.**—22–35 வருடங்கள்.

**வேதனம்.**—ரூபா. 800.00—45—1115 மாதத்திற்கு.

6. **நுண்தொழில் உதவியாளர் ஆலை பராமரிப்பு மேற்பார்வை செய்யும் உத்தியோகத்தர்கள் :** சிரேஷ்ட நுண்தொழில் பயிற்சிக் கழகத்தின் கனிஷ்ட நுண்தொழில் உத்தியோகத்தர்கள் பதவிச் சான்றிதழ் உடையவர்கள்

அல்லது

பொறியியல் தொழில் அல்லது வேலைத்தல அனுபவம் 5 வருடத்திற்கு மேற்பட உள்ளவர்.

வயது : 45 வருடத்திற்கு மேற்படாதவர்.

வேதனம் : ரூபா. 300.00—10 x 15—450 மாதத்திற்கு.

7. **சுருக்கெழுத்தாளர்கள் :** சிங்களம், ஆங்கிலம், பொ. க. த. (சாதாரணதரம்) பரீட்சை சித்தியும் சுருக்கெழுத்து, தட்டெழுத்து அனுபவமும்.

**வயது.**—45 வருடத்திற்கு மேற்படாதவர்.

**வேதனம்.**—ரூபா. 240.00—10 ம், 15 ம் —ரூபா. 480.00 மாதத்திற்கு.

**பொதுத் தகவல்கள்**

1. வேதனங்கள் யாவும் உள்ளடங்கியவை. சகாயப்பணநிதி சம்பந்தமான விபரங்கள் கூடிய விரைவில் சபையால் தீர்மானிக்கப்படும்.

2. அண்மையில் பெற்ற சான்றிதழ்ப் பத்திரங்களின் பிரதிகள் விண்ணப்பங்களுடன் இணைக்கப்படல் வேண்டும்.

3. அரசாங்க கூட்டுத்தாபனங்களில் கடமையாற்றுபவர்கள் விரும்பினால் கூட்டுத்தாபனத் தலைவர்களுக்கூடாக விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டும். அவர்களை சேவையிலிருந்து விடுதலை செய்வதாக கூட்டுத்தாபனத் தலைவரால் அளிக்கப்பட்ட பத்திரமும் விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும். அத்தகையவர்களின் வேதனம் தற்போது அவர்கள் பெறும் வேதனத்திற்குக் குறையாததாக இருக்கும்.

4. நெல் விற்பனைச் சபையின் தலைமைக் காரியாலயம் கொழும்பில் அமைந்திருக்கும். உதவி எந்திரவியலாளர், உதவி நுண்தொழிலாளர், ஆலை மேற்பார்வையாளர் தவிர்ந்த மற்றவர்கள் கொழும்பில் கடமை யாற்றும்படி விரும்பப்படுவார்கள்.

5. குறுகிய கால அறிவித்தலில் விண்ணப்பதாரர்களின் சொந்தச் செலவில் நேர்முகப் பரீட்சைக்குத் தோன்றத்தயாராக இருத்தல் வேண்டும்.

6. 1.11.70 ந் திகதி பிற்பகல் 4.30 மணிக்குள் விண்ணப்பங்கள் ஏற்பது முடிவடையும். விண்ணப்பங்கள் யாவும் செயலாளர், நெல் விற்பனைச் சபை, இல. 5 எலிபாங்க் ரேட், கொழும்பு 5, என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பும் கடித உறையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

செ. ப. சேனநாயக்க,
கமத்தொழில் சேவை ஆணையாளர்.

கமத்தொழிற் சேவைத் திணைக்களம்,
42, சேர் மாக்கஸ் பெனாந்து வீதி,
கொழும்பு 7,
1970 ம் ஆண்டு ஒக்ரோபர் மீ 16 ந் உ.

10–851—23.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,929

---

# பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## கல்வி அமைச்சு

### ஆசிரியர் கலாசாலைகளில் நடைபெறும் சிங்கள/தமிழ் பொதுப் பயிற்சி நெறிகளுக்கு ஆசிரியர்களைச் சேர்த்தல்— 1971 ஆம் ஆண்டு

மேற்குறித்த விடயம் பற்றி 1969 ஆம் ஆண்டு ஏப்றில் மாதம் 25 ஆந் திகதிய 14,851 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தலுக்கு உங்கள் கவனம் கோரப்படுகிறது.

2. மேற்குறித்த அறிவித்தலுக்கிணங்கத் தகைமை பெறுபவர்களும் 1971 ஆம் ஆண்டு ஆசிரிய கலாசாலைகளில் நடைபெறும் பொதுப் பயிற்சி நெறியைப் பின்பற்றவிரும்புபவர்களுமான ஆசிரியர்கள் தமது விண்ணப்பங்களை 10.11.70 அன்று அல்லது அதற்கு முன் எனக்குக் கிடைக்கக்கூடியதாக தமது பாடசாலைத் தலைவர் மூலம் அனுப்புமாறு வேண்டப்படுகின்றனர். விண்ணப்பம் கீழ்க்காணும் படிவ முறையில் தயாரிக்கப்பட வேண்டும்.

3. மேற்போந்த 1 ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள அறிவித்தலுக் கிணங்கத் தேவைப்படும் மேலதிக தகைமைகள் பின்வருமாறுகும் :—

கீழே கொடுபட்டுள்ள 5 தகைமைகளில் குறைந்தபட்சம் 3 தகைமைகள்.

(1) க. பொ. த. (உயர்தர) ப. பரீட்சையில் சிங்களத்தில்/தமிழில் சித்தி.

(2) க. பொ. த. (உயர்தர) ப. பரீட்சையில் புவியியலில் சித்தி.

(3) க. பொ. த. (உயர்தர) ப. பரீட்சையில் சரித்திரத்தில்/ஆட்சியியலில்/பொருளியலில் சித்தி.

(4) க. பொ. த. (சாதாரணதர) ப. பரீட்சையில் கணிதத்தில் சித்தி.

(5) க. பொ. த. (சாதாரணதர) ப. பரீட்சையில் பௌதிகவியலில் இரசாயனவியலில்/உயிரியலில்/விவசாயத்தில்/மனையியலில் சித்தி.

எஸ். பி. ஜயசூரிய,
மகா வித்தியாதிபதிக்காக.

ஆசிரியர் கலாசாலைகள் கிளை,
கல்வி அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
1970 ம் ஆண்டு ஒத்தோபர் மீ 10 ந் உ.

### விண்ணப்பப் படிவம்

1. விண்ணப்பதாரியின் பெயரும் விலாசமும் : ————.
2. பாடசாலையும் அதன் விலாசமும் : ————.
3. தற்போது வகிக்கும் நியமனத்தின் தன்மையும் அதனைப் பெற்ற திகதியும் : ————.
4. பெற்றுள்ள மேலதிக தகைமைகள் : ————.
(மேற்போந்த அறிவித்தலின் 3 ஆம் பந்தியைப் பார்க்கவும்)

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : ————.

————,
பாடசாலைத் தலைவரின் கையொப்பம்.

10–736—23.10.70 ந் திகதிய வர்த்தமானி இல 14,929

---

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## தேசிய வீடமைப்புத் திணைக்களம்

கொழும்பு ஆமர் வீதி அடுக்கு மாடி வீடுகளின் "அ" துண்டுக்கு நீர்ச்சேவையைத் திருத்தம் செய்வதற்காக 1970 நவம்பர் மாதம் 10 ம் தேதியில் காலை 10 மணிவரை கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

1970 ம் ஆண்டு ஒக்ரோபர் 30 ம் தேதியில் நண்பகல் 12 மணி வரை கேள்விப் பத்திரப் படிவங்கள் வழங்கப்படும்.

மேலதிக விபரங்களை இத்திணைக்களத்து அத்தியட்சகப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

ஐ. ஏ. சி. பெர்ணாண்டோ,
பதில் தேசிய வீடமைப்பு ஆணையாளர்.

தேசிய வீடமைப்புத் திணைக்களம்,
கொழும்பு 2.

10-823—23.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,929

## கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு வேலையாட்களுக்குச் சாப்பாடு வழங்கல்

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு வேலையாட்களுக்குச் சாப்பாடு வழங்குவதற்கெனக் கேள்விப் பத்திரங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

2. பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைய கேள்வியாளர்கள் சாப்பாடுகளை வழங்கச் சம்மதிக்க வேண்டும். போயா முன்தினமும், அரசாங்க விடுமுறை நாட்களும் தவிர, தினமும் 6,300 மத்தியானச் சாப்பாட்டுப் பொட்டணங்கள், போயா முன்தினங்களில் 2,000 மத்தியானச் சாப்பாட்டுப் பொட்டணங்கள், அரசாங்க விடுமுறை நாட்களில் 1,000 மத்தியானச் சாப்பாட்டுப் பொட்டணங்கள். இராச்சாப்பாடு தினமும் சுமார் 1,000 பொட்டணங்கள். கேள்வியாளர்கள் மேலே குறிப்பிட்ட முழுத்தொகைச் சாப்பாட்டை அல்லது அதில் ஒரு பகுதியை வழங்க முன்வரலாம்.

3. ஒவ்வொரு சாப்பாட்டுப் பொட்டணத்திலும்—

12 அவுன்ஸ் சம்பா அரிசிச் சோறு இருத்தல் வேண்டும் ;

2 கறிகள் இருத்தல் வேண்டும்—ஒவ்வொரு கறியின் எடை 4 அவுவுன்ஸ் ;

1½ அவுன்ஸ் எடையுள்ள 1 மீன்கறியும், விசேடமாகத் தயாரித்த ஒரு கறிவகையும் இருத்தல் வேண்டும். விசேட தயாரிப்பு 2 அவுன்ஸ் பொரித்த மீனை அல்லது ஒரு முழு அவியல் முட்டையாக அல்லது ஒரு பொரித்த முட்டையாக அல்லது ஒரு "கட்லெட்" ஆக இருத்தல் வேண்டும்.

½ அவுன்ஸ் சம்பல் மிளகாயுடன் பொரித்த கருவாடு அல்லது பதம் செய்யப்பட்ட கருவாடு.

சாப்பாட்டுப் பொட்டணத்தைச் சுற்றியிருக்கும் பத்திரத்தின் எடை 2 அவுஸ்ஸுக்கு மேலாக இருத்தலாகாது.

4. ஒரு குறித்த நாளில் எத்தனை சாப்பாடுப் பொட்டணங்கள் தேவைப்படும் என்பதை அந்த நாளுக்கு முதல்நாள் பிற்பகல் 3 மணியளவில் தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்வியாளருக்கு அறிவிக்கப்படும். மத்தியானச் சாப்பாட்டுப் பொட்டணங்களை முற்பகல் 10 மணியளவிலும், இராச் சாப்பாட்டுப் பொட்டணங்களை பிற்பகல் 6.30 மணியளவிலும் குறிப்பிட்ட இடத்தில் வழங்குதல் வேண்டும்.

5. ஒவ்வொரு சாப்பாட்டுக்கும் ரூபா 1 வீதம் கொடுக்கப்படும் தேவைப்படும் சாப்பாட்டின் எண்ணிக்கை காலத்திற்குக் காலம் மாற்றமடையும். வழங்கப்பட்ட சாப்பாடுகளுக்கான பணம் மாதா மாதம் கொடுக்கப்படும்.

6. சாப்பாடுகள் உருசியுள்ளனவாயும், சுத்தமாகவும் இருப்பதோடு மேலே குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு அமைவாகவும் இருத்தல் வேண்டும். இல்லாவிட்டால் ஒப்பந்தம் இரத்துச் செய்யப்படும்.

7. மேலே குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கேற்ப சாப்பாடுகளை வழங்குவதற்கு உடன்படும் கேள்வியாளர்கள், அடையாளம் பொறித்த கேள்விப் பத்திரங்களை 30.10.1970 ஆந் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக கப்பற்றுறை ஆணையாளருக்கு அனுப்புதல் வேண்டும்.

கே. ஜி. டி. டி. பதிரத்ன,
பிரதி கப்பற்றுறை ஆணையாளர் (நிர்வாகம்),
கப்பற்றுறை ஆணையாளருக்காக.

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு,
கொழும்பு 1, 1970 ஒக்தோபர் 15 ஆம் திகதி.

10-790—23.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,929

---

## கச்சேரி—மன்னார் மாவட்டம்

மன்னார் மாவட்டத்தில் கீழ்க்காணும் வேலைகளுக்கு கேள்விப்பத்திரங்கள் மன்னார் அரசாங்க அதிபரினால் 1970 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 28 ம் திகதி பகல் 11.00 மணிவரை மன்னார்க் கச்சேரியில் ஏற்றுக்கொள்ளப்படும்.

இசைமாலைத் தாழ்வுப் பிரவேசப் பாதை.

2. மன்னார்க் கச்சேரியில் அரசாங்க அதிபரிடமிருந்து 1970 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 27 ம் திகதிவரை பெறக்கூடிய கேள்விப்பத்திரங்கள் இணைப் பிரதிகளில் அனுப்புதல் வேண்டும். இதனைப்பற்றிய மேலதிக விபரங்களையும், தகவல்களையும் மன்னார் அரசாங்க அதிபரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். அரசாங்க திணைக்களங்களுடன் பதிவுபெற்ற ஒப்பந்தக்காரர்களும், அனுமதி பெற்ற கிராம முன்னேற்றச் சங்கங்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் போன்றவைகளே கேள்விப்பத்திரங்களை அனுப்பத் தகுதி வாய்ந்தவை. கேள்விப்பத்திரங்கள் அனுப்புவோர் மன்னார்க் கச்சேரியில் ரூபா 25 கட்டிப் பெற்ற பற்றுச் சீட்டினைக் காண்பித்துக் கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். கிராம முன்னேற்றச் சங்கங்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் போன்றவை கட்டுப்பணம் கட்டவேண்டியதில்லை.

3. கேள்விப்பத்திரங்கள் மன்னார்க் கச்சேரியிலுள்ள கேள்விப் பத்திரப் பெட்டியிற் சேர்க்கலாம். அல்லது பதிவு செய்யப்பட்ட தபால் மூலம் "அரசாங்க அதிபர், மன்னார்" என்று விலாசமிட்டு 1970 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 28 ம் திகதி (28.10.70) நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படவேண்டும். தபால்மூலம் சேர்க்கப்படும் ஒவ்வொரு கேள்விப்பத்திர மேலுறையும் "இசைமாலைத்தாழ்வு பிரவேசப் பாதை" என்று எழுதப்பட்டிருத்தல் வேண்டும். குறிப்பிட்ட கால வெல்லையின் பின்னர் கிடைக்கப்பெற்ற கேள்விப்பத்திரங்கள் கவனத்துக்கெடுத்துக் கொள்ளப்படமாட்டா.

4. இக்கேள்விப்பத்திரங்கள் மன்னார்க் கச்சேரியில் 1970 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 28 ம் திகதி (28.10.70) பகல் 11.30 மணிக்குத் திறக்கப்படும். கேள்விப்பத்திரங்களை அனுப்பியோர் சமுகந்தரலாம்.

5. தெரிவு செய்யப்பட்ட கேள்வியாளர் ஒப்பந்தம் ஒன்றினைக் காட்டும்படி எழுத்துமூலம் அறிவிக்கப்படுவர். இவ்வறிவித்தலை ஏற்ற 10 நாட்களுக்குள்ளாக ஒப்பந்தத்தில் கைச்சாத்திடத் தவறின் கட்டுப்பணம் கட்டிய ரூபா 25 பறிமுதலாக்கப்படும். ஒப்பந்தம் கைச்சாத்திடும் நேரத்தில் கேட்கப்பட்ட தொகையில் இரண்டு சதவிகித தொகையை கட்டுப்பணமாகக் கட்டுதல் வேண்டும். இக்கட்டுப்பணம் மேற்காட்டப்பட்ட வேலை திருப்தியாக முடியும்வரை திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

6. செய்யப்பட்ட வேலைகளுக்கு 90 சதவிகித பணமே கொடுக்கப்படும். எஞ்சிய 10 விகிதப் பணமும் 5 ம் பந்தியிற் காட்டப்பட்ட கட்டுப்பணமும் முழுவேலைகளும் முடிந்த மூன்று மாத காலத்தின் பின்னரே கொடுக்கப்படும்.

நா. வேதாரணியசேயோன்,
உதவி அரசாங்க அதிபர்,
மன்னார் மாவட்டம்.

கச்சேரி, மன்னார்,
1970 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 12 ந் திகதி.

10-799—23.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,929

---

## கச்சேரி—மன்னார் மாவட்டம்

மன்னார் மாவட்டத்தில் கீழ்க்காணும் வேலைகளுக்கு கேள்விப்பத்திரங்கள் மன்னார் அரசாங்க அதிபரினால் 1970 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 28 ம் திகதி பகல் 11.00 மணிவரை மன்னார்க் கச்சேரியில் ஏற்றுக்கொள்ளப்படும்.

உயிலங்குளம் பிரவேசப்பாதை.

2. மன்னார்க் கச்சேரியில் அரசாங்க அதிபரிடமிருந்து 1970 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 27 ம் திகதிவரை பெறக்கூடிய கேள்விப்பத்திரங்கள் இணைப் பிரதிகளில் அனுப்புதல் வேண்டும். இதனைப்பற்றிய மேலதிக விபரங்களையும், தகவல்களையும் மன்னார் அரசாங்க அதிபரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். அரசாங்க திணைக்களங்களுடன் பதிவுபெற்ற ஒப்பந்தகாரர்களும், அனுமதி பெற்ற கிராம முன்னேற்றச் சங்கங்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் போன்றவைகளே கேள்விப்பத்திரங்களை அனுப்பத் தகுதி வாய்ந்தவை. கேள்விப்பத்திரங்கள் அனுப்புவோர் மன்னார்க் கச்சேரியில் ரூபா 25 கட்டிப் பெற்ற பற்றுச் சீட்டினைக் காண்பித்துக் கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். கிராம முன்னேற்றச் சங்கங்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் போன்றவை கட்டுப்பணம் கட்டவேண்டியதில்லை.

3. கேள்விப்பத்திரங்கள் மன்னார்க் கச்சேரியிலுள்ள கேள்விப் பத்திரப் பெட்டியிற் சேர்க்கலாம். அல்லது பதிவு செய்யப்பட்ட தபால் மூலம் "அரசாங்க அதிபர், மன்னார்" என்று விலாசமிட்டு 1970 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 28 ம் திகதி (28.10.70) நண்பகல் 11.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்பட

வேண்டும். தபால்மூலம் சேர்க்கப்படும் ஒவ்வொரு கேள்விப்பத்திர மேலுறையும் "உயிலங்குளம் பிரவேசப் பாதை" என்று எழுதப்பட்டிருத்தல் வேண்டும். குறிப்பிட்ட காலவெல்லையின் பின்னர் கிடைக்கப்பெற்ற கேள்விப்பத்திரங்கள் கவனத்துக்கெடுத்துக் கொள்ளப்படமாட்டா.

4. இக்கேள்விப்பத்திரங்கள் மன்னார்க் கச்சேரியில் 1970 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 28 ம் திகதி (28.10.70) பகல் 11.30 மணிக்குத் திறக்கப்படும். கேள்விப்பத்திரங்களை அனுப்பியோர் சமுகந்தரலாம்.

5. தெரிவு செய்யப்பட்ட கேள்வியாளர் ஒப்பந்தம் ஒன்றினைக் காட்டும்படி எழுத்துமூலம் அறிவிக்கப்படுவர். இவ்வறிவித்தலை ஏற்ற 10 நாட்களுக்குள்ளாக ஒப்பந்தத்தில் கைச்சாத்திடத் தவறின் கட்டுப்பணம் கட்டிய ரூபா 25 பறிமுதலாக்கப்படும். ஒப்பந்தம் கைச்சாத்திடும் நேரத்தில் கேட்கப்பட்ட தொகையில் இரண்டு சதவிகித தொகையை கட்டுப்பணமாகக் கட்டுதல் வேண்டும். இக்கட்டுப்பணம் மேற்காட்டப்பட்ட வேலை திருப்தியாக முடியும்வரை திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

6. செய்யப்பட்ட வேலைகளுக்கு 90 சதவிகித பணமே கொடுக்கப்படும். எஞ்சிய 10 விகிதப் பணமும் 5 ம் பந்தியிற் காட்டப்பட்ட கட்டுப்பணமும் முழுவேலைகளும் முடிந்த மூன்று மாத காலத்தின் பின்னரே கொடுக்கப்படும்.

நா. வேதாரணியசேயோன்,
உதவி அரசாங்க அதிபர்,
மன்னார் மாவட்டம்.

கச்சேரி, மன்னார்,
1970 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 12 ந் திகதி.

10-800—23.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,929

---

## இலங்கைப் போக்குவரத்துச் சபை

கொழும்பு 5, கிருல வீதி 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கேள்விப்பத்திரச் சபைத் தலைவர், 1970 ஆம் ஆண்டு நவம்பர் 25 ஆம் தேதி மு. ப. 10.00 மணிவரை, பற்றறிகள் (வர்த்தக வாகனங்கள்) வழங்குவதற்கான கேள்விப் பத்திரங்களை உள்ளூர் / வினியோகத்தர்களிடமிருந்து ஏற்றுக் கொள்ளுவார்.

1970 ஆம் ஆண்டு நவம்பர் 24 ஆம் தேதி நண்பகல் 12.00 மணிவரை எனது அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய தான பத்திரங்களில் கேள்விப் பத்திரங்கள் தயாரிக்கப்பட்டு இரட்டைப் பிரதிகளில் அனுப்பப்படவேண்டும்.

கேள்விப்பத்திரக் கட்டுப்பணமாக ரூபா 100/-ஐ, பொரலஸ் கமுவை, வெரகெரையிலுள்ள பிரதிப் பிரதம கணக்காள உத்தியோகத்தரின் அலுவலகத்தில் காசாகக் கட்டி, இதற்கான பற்றுச் சீட்டை கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படுவதற்கு முன் காட்ட வேண்டும்.

மேலதிக விவரங்களை எனது அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பதில் பிரதம வினியோக உத்தியோகத்தர்,
இலங்கைப் போக்குவரத்துச் சபை,
வெரகெரை,
பொரலஸ்கமுவை.

வெரகெரை,
பொரலஸ்கமுவை.

10-839—23.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,929

---

## தேசிய பாற்சபை

யோகேட், ஐஸ்கிறீம் ஆகியவற்றை அடைப்பதற்கு பிளாஸ்ரிக் கோப்பைகள், அழுத்திய கடதாசிக் கோப்பைகள், கடதாசிக் கோப்பைகள் ஆகியவற்றை வழங்கல் செய்வதற்குக் கேள்விப் பத்திரங்கள் என்னால் கோரப்படுகின்றன.

முடிவு திகதி : 1970 நொவெம்பர் 26 ம் திகதி பிற்பகல் 2 மணி.

கேள்விப்பத்திர ஆவணங்கள் கொடுக்கும் கடைசித் திகதி : 1970 நொவெம்பர் 25 ம் திகதி பிற்பகல் 3 மணி.

கேள்விப் பத்திர ஆவணங்களைக் கொழும்பு 5, நாரஹென்பிற்றுவில் உள்ள பாற்சபை அலுவலகத்து வழங்கல்கள் முகாமையாளரிடம் இருந்து மீளப் பெறக்கூடிய கட்டுப்பணம் ரூபா 250 ம், மீளப் பெற முடியாத கட்டணம் ரூபா ·25 ம், பணமாகக் கொடுத்துப் பெற்றுக் கொள்ளலாம்.

தலைவர்,
பாற்சபை.

பாற்சபைத் தலைமைக் காரியாலயம்,
35, எலிபாங் தெரு,
கொழும்பு 5,
1970 ஒற்றோபர் 11 ம் திகதி.

10–847—23.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,929

---

## சுகாதாரத் திணைக்களம்—மட்டக்களப்புப் பிரிவு

### பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்கல்

**கேள்விக்குத் தேவையான ஆட்களும் சேவையும்.**—1970 ம் ஆண்டு டிசெம்பர் 1 ந் திகதி தொடக்கம் செப்ரம்பர் மாதம் 30 ம் திகதி 1971 (இரு நாட்களும் உட்பட) முடிய உள்ள காலம் வரைக்கும் கீழ்க்காணும் அட்டவணையின் 1 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் நிலையங்களுக்கு பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்குவதற்கு உரியதும் முத்திரைகள் பொறிக்கப்பட்டதுமான கேள்விகளை இலங்கையர் அல்லது இலங்கையர் தொழில் நிலையங்களிடமிருந்து மட்டக்களப்பு பிரிவு சுகாதார சேவை அத்தியட்சகர் ஏற்றுக்கொள்வார்.

2. (i) **கேள்விக்கட்டுப் பணம்.**—ரூபா 100/- பெறுமதியான வைப்புப் பணத்தை எந்த ஒரு கச்சேரியிலாவது எனது பெயரில் கட்டிப் பற்றுச் சீட்டுப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

(ii) **கேள்விப் பத்திரங்கள்.**—கேள்விப் பத்திரங்கள் அநுராதபுரம், பதுளை, கொழும்பு, காலி, யாழ்ப்பாணம், களுத்துறை, கண்டி, கேகாலை, குருநாகல், மாத்தறை, மாத்தளை, புத்தளம், இரத்தினபுரி, வவுனியா, ஆகிய இடங்களிலுள்ள சுகாதார சேவை அத்தியட்சகர் அலுவலகங்களிலும் எனது அலுவலகத்திலும் கேள்விகள் முடியும் தினத்திற்கு முதல் நாள் நண்பகல் 12 மணிக்கு முதல் கொடுக்கப்படும். உரிய பத்திரத்தில் அனுப்பப்படாத கேள்விகள் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது. கேள்விப் பத்திரங்களுக்குரிய விண்ணப்பப் பத்திரங்களுடன் கேள்விக் கட்டுப்பண பற்றுச் சீட்டு இணைக்கப்பட்டு இருத்தல் வேண்டும்.

தொடர்புள்ள கேள்விக்காரர்கள் கேள்விப் பத்திரங்களுக்குரிய விண்ணப்பங்களை நேரகாலத்தோடு பெற்று, அவற்றைக் கேள்விகள் முடிவடையும் காலத்துக்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

மேலே 2 ம் பந்தியில் கூறப்பட்டுள்ள எந்த ஒரு காரியாலயத்திலும் இதற்கான பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

தகுதி விபரங்களையோ அல்லது நிதி நிலை நிருபணத்தையோ அளிக்கத்தவறினால் கேள்விக் கட்டுப்பணத்தை இழக்க நேரிடும்.

3. **பெறுமதி விபரங்கள்.**—கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பம் செய்யுமுன் கேள்விகள் முடிவடையும் திகதிக்கு முன்னர் தங்களுடைய பெறுமதி விபரங்களை எனக்கோ அல்லது அவர்கள் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ள விரும்பும் சுகாதார சேவை அத்தியட்சகருக்கோ தெரிவித்தல் வேண்டும்.

4. **தொகைகள்.**—கீழ்க்காணும் அட்டவணையில் 5 ம் பந்தியில் உத்தேச விநியோகத் தொகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

5. **கேள்விகள் அனுப்பப்படவேண்டிய முறை.**—எல்லாக் கேள்விகளையும் இணைப்படிகளுடன் சுகாதார சேவை அத்தியட்சகர், மட்டக்களப்பு என்ற முகவரியிடப்பட்ட உறைகளில் வைத்து அனுப்பப்பட வேண்டும். முத்திரை பொறிக்கப்பட்டுள்ள கேள்விகளைக் கொண்டுள்ள உறையின் இடது பக்கத்து மேல் மூலையில் சேவையின் தன்மையும், இடது பக்க கீழ் மூலையில் அனுப்புபவரின் பெயரும் முகவரியும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

முத்திரை இடப்பட்ட கேள்விகளைக் கொண்டுள்ள உறைகளைப் பதிவுத் தபால் மூலம் அனுப்பலாம். அல்லது அவைகளை இந்தக் காரியாலயத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டிக்குள் போடலாம். அல்லது என்னிடமோ செயலாளர்/கணக்காளரிடமோ கொடுத்தால் அவர் அக்கேள்வியை ஒப்புக் கொண்டதற்கு ஒரு பற்றுச் சீட்டு தருவார்.

6. **கேள்விகள் மூடப்படுதல்.**—கீழ் அட்டவணையின் 4 வது பந்தியில் கூறப்பட்டிருக்கும் திகதிகளில் காலை 10.00 மணிக்கு இந்தக் காரியாலயத்தில் கேள்விகள் மூடப்பெற்று உடனடியாகத் திறக்கப்படும்.

7. **கேள்விகள் திறக்கப்படுதல்.**—கேள்விகள் திறக்கப்படும்போது கேள்விக்காரர்கள் சமுகமாயிருக்கலாம். சமுகமாயிருக்கும் கேள்விக்காரர்களுக்கு கேள்விக்காரர்களின் பெயர்களும் தொகைகளும் வாசித்துக் காண்பிக்கப்படும். ஒரு கேள்வியை நுனித்தாய விரும்பும் எந்த ஒரு கேள்விகாரரும் என்னுடனே அல்லது எனது அதிகாரம் பெற்ற பிரதிநிதியுடனே ஒழுங்குகள் செய்த பின்னர்தான் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எந்த ஒரு கேள்வியின் இணைப்படியையும் நுனித்தாய அனுமதிக்கப்படுவர்.

8. **கேள்விகள் பற்றித் தீர்மானித்தல்.**—கேள்விப்படிவங்களினுள்ள சாப்பாட்டுப் " பீ " அட்டவணையிற் கொடுக்கப்பட்டிருக்கும் விடயங்களுக்குக் குறிக்கப்பட்டிருக்கும் வீதப்படி உண்டாகும் சேவையின் முழுச் செலவுத் தொகையை அடிப்படையாகக் கொண்டே பெறப்பட்டுள்ள கேள்விகள் தீர்மானிக்கப்படும்.

இருந்தும் கேள்விகாரர்கள் கேள்விப் பத்திரத்தின் அட்டவணை " சீ " யில் உள்ள மேலதிகமான உணவுப் பொருட்களுக்கும் வீதங்களைக் குறிப்பிட வேண்டும். ஆனல் கேள்வியில் குறிக்கப்பட்டிருக்கும் வீதப்படி அல்லது சந்தை வீதப்படி இவைகளில் எது குறைந்ததோ அந்த வீதப்படியும் விலை கட்டுப்படுத்தப்பட்டிருந்தால் அந்த விலைப்படியே பணம் கொடுக்கப்படும்.

9. **கேள்விக்கு விடப்பட்ட வீதங்கள் செல்லுபடி.**—கேள்விக்காரர்களால் குறிக்கப்பட்ட வீதங்கள் 1 ம் பந்தியில் சொல்லியிருப்பதுபோல் ஒப்பந்தம் செய்யப்பட்ட காலம் வரைக்கும் வீதங்கள் மாற்றி அமைக்க அனுமதிக்கப்படமாட்டாது.

10. **பிணை வைப்புப் பணங்கள்.**—இங்கு தரப்பட்டிருக்கும் அட்டவணையின் 3 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் தேவையான பிணைப் பணத்தைக் கட்டிய பின்பே தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர் ஒப்பந்தத்திற் கைச்சாத்திட வேண்டும்.

11. **களஞ்சியத்திடுகை இடவசதி.**—தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர்களுக்கு தாபனத்திலோ அடுத்துள்ள இடங்களிலோ களஞ்சிய அறை போன்ற வசதிகள் கொடுக்கப்பட மாட்டாது.

12. **கேள்வி நிபந்தனைகள்.**—நியமிக்கப்பட்ட கேள்விக்காரர்கள் கேள்விப்படிவங்களின் பின் புறத்தில் இருக்கும் கேள்வி நிபந்தனைகளைப் படித்து அங்கு கொடுக்கப்பட்டிருக்கும் தேவைகளுக்கிணங்க நடக்க வேண்டும். கேள்விப் படிவத்திலுள்ள உடன்படிக்கை நிபந்தனைகளையும் கேள்விக்காரர்கள் கவனிக்க வேண்டும்.

13. (i) **கேள்விக்காரர்களுக்கு அறிவித்தல்.**—கேள்விக்காரர்களால் குறிப்பிடப்படும் வீதங்கள் ஒரு முழு உணவுச் சாப்பாட்டிற்கு 4½ அவுண்ஸ் அரிசி அளவு வீதம் இரு சாப்பாடுகள் ஒரு நோயாளிக்கு விநியோகிக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

(ii) உணவு அட்டவணையில் அரிசியின் அளவு இப்போதுள்ள 12 அவுண்ஸ் அளவிலிருந்து 9 அவுண்ஸ் அரிசி அளவாக திருத்தப்பட்டிருக்கின்றபடியால் சோற்றுடன் விநியோகிக்கப்படும் பாண் 1970 ம் ஆண்டு ஒக்டோபர் மாதத்திலிருந்து தேவைப்பட மாட்டாது.

(iii) ஒரு இரு. 50 சத வீதம் இப்போதுள்ள விலையில் குறைக்கப்படாத வீதத்தில் உணவுக்கட்டுப்பாட்டதிகாரியினுல் அரிசி விநியோகிக்கப்படும். கேள்விக்காரர்கள் அந்த அரிசிக்கு பணம் கொடுத்தல் வேண்டும். நன்கொடையாகவோ, இனமாகவோ அளிக்கப்பட்ட அரிசி ஒப்பந்தக்காரர்களுக்குச் சமையலுக்கு விநியோகிக்கப்பட்டால் விலை குறைக்கப்படாத வீதத்தில் அந்த அரிசியின் அளவு ஒப்பந்தக்காரரின் உணவுப் பணத்திலிருந்து கழிக்கப்படும். விலை குறைக்கப்பட்ட அரிசி விநியோகிக்கப்பட்டால் விலை குறைக்கப்பட்ட வீதத்தில் ஒப்பந்தக்காரர்கள் பணம் செலுத்துதல் வேண்டும். அந்த அரிசிக்கான கழிவு விலை குறைக்கப்பட்ட அரிசியின் விலைக்கும் விலை குறைக்கப்படாத அரிசியின் விலைக்குமுள்ள வித்தியாசத்தின் படி ஒப்பந்தக்காரர்களின் உணவுப் பணத்திலிருந்து கழிக்கப்படும்.

(iv) வேலையாட்கள் அரிசிப்பங்கீட்டுப் புத்தகங்களைக் கொடுத்தாலொழிய அவர்களுக்குப் பாண் உணவு விநியோகிக்கப்படும். அப்புத்தகங்களைக் கொடுத்தால் விநியோகிக்கப்படாத பாணின் விலை ஒப்பந்தக்காரரின் பணத்திலிருந்து பின்வருமாறு அறவிடப்படும் :—

(அ) கூப்பனிலிருந்து பெறப்பட்ட அரிசி இன்று போன்று இனமாகவிருந்தால் விநியோகிக்கப்படாத பாணின் முழு விலையுங் கழிக்கப்படும்.

(ஆ) அந்தக் கூப்பன்களின் விலை குறைக்கப்பட்ட வீதத்தில் கொடுக்கப்படும் அரிசிக்கு ஒப்பந்தக்காரர் பணம் செலுத்தினுல் விநியோகிக்கப்படாத பாணின் விலைக்கும் விலை குறைக்கப்பட்ட அரிசியின் விலைக்கும் உள்ள வித்தியாசத்தின்படிக்கு அறவிடப்படும்.

சுகசேவை அத்தியட்சகர் அலுவலகம்,
மட்டக்களப்பு,
1970 ம் ஆண்டு ஒக்டோபர் மீ 9 ந உ.

தா. சண்முகநாதன்,
சுகசேவை அத்தியட்சகர்,
மட்டக்களப்பு மாவட்டம்.

**மேல் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணை**

| 1 | 2 | 3 | 4 | 5 | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | அண்ணளவான உணவுகளின் அளவு | | | | | |
| | | | | ஊழியர்களுக்கு | | | நோயாளர்கட்கு | | |
| நிலையம் | கேள்வி வைப்புப் பணம் | பிணை வைப்புப் பணம் | கேள்விகள் மூடப்படும் திகதி | மீன் | கருவாடு | மரக்கறி | மீன் | கருவாடு | மரக்கறி |
| | ரூபா. | ரூபா | | | | | | | |
| சமைக்காத உணவு சம்மான்துறை வைத்தியசாலை | 100 | 600 | 16.11.70 மு. ப. 10 மணி | 300 | 650 | 1,250 | 600 | 1,220 | 2,560 |

10-729—23.10.70 ந திகதிய வர்த்தமானி இல. 14,929

## கமத்தொழில் திணைக்களம்

### அரசாங்கப் பண்ணைகளுக்கு புளி மாம்பழ விதைகள் விநியோகித்தல் பாரங்கொடுத்தல் ஆகிய வேலைகளுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன

மேற்கூறப்பட்ட விடயம் சம்பந்தமாக சீல் வைக்கப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 1970.11.4 ந் திகதி மு. ப. 10.00 மணி வரையும் யாழ்ப்பாணம் கமத்தொழிற் கந்தோரில், கமத்தொழில் (பண்ணை முகாமையும் ஆக்கமும்) அதிகாரியால் ஏற்றுக்கொள்ளப்படும்.

(1) முருங்கன் கமத்தொழிற் பண்ணைக்குப் பூச்சிகளால் சேதப்படுத்தப் படாத 10,000 புளி மாங்கொட்டைகள்.

புளி மாம்பழ விதைகள் நாளொன்றுக்கு 2,000—3,000 வரையும் விநியோகித்தல் வேண்டும்.

(2) வவுனியா கமத்தொழிற் பண்ணைக்குப் பூச்சிகளால் சேதப்படுத்தப் படாத 7,000 புளி மாங்கொட்டைகள்.

புளி மாம்பழ விதைகள் நாளொன்றுக்கு 2,000—3,000 வரையும் விநியோகித்தல் வேண்டும்.

(3) திருக்கோணமலை கமத்தொழிற் பண்ணைக்குப் பூச்சிகளால் சேதப் படுத்தப்படாத 4,000 புளி மாங்கொட்டைகள்.

புளி மாம்பழ விதைகள் நாளொன்றுக்கு 2,000—3,000 வரையும் விநியோகித்தல் வேண்டும்.

விநியோகித்தல் பாரங்கொடுத்தல் 1970 ம் ஆண்டு நொவம்பர் மாதம் இரண்டாம் கிழமையில் ஆரம்பித்து 1971 ம் ஆண்டு ஜனவரி மாதம் 15 ந் திகதிக்கு முன்னர் முடிவடைதல் வேண்டும். பழுதடையாத விதைகளுக்கு மட்டுமே பணம் கொடுக்கப்படும். 100 கொட்டைகளுக்கு அறவிடும் தொகையே குறிப்பிட வேண்டும். புளி மாங்கொட்டைகள் விநியோகிக்க வேண்டிய திகதியை ஒவ்வொரு பண்ணை முகாமையாளரும் பின்னர் அறிவிப்பர்.

2. மேற்கூறப்பட்ட நிலையங்களிலும் செய்யும் வேலைகள் சேவைகளுக்கு வெவ்வேறான கேள்விப் பத்திரங்கள் தயாரித்தல் வேண்டும். ஒவ்வொரு கேள்வி பத்திரங்களுக்கும் ரூபா 10/- வைப்புப்பணமாகச் செலுத்துதல் வேண்டும்.

3. யாழ்ப்பாணம் கமத்தொழில் கந்தோரில் கமத்தொழில் அதிகாரி (ப. மு. ஆ.) யால் கொடுக்கப்படும் விண்ணப்பப் படிவங்களிலேயே கேள்விப்பத்திரங்கள் கோருதல் வேண்டும். ஒவ்வொரு கேள்விப்பத்திரமும் இரு பிரதிகளில் தயாரித்துக் கையொப்பமிட்டு சீல்போட்ட தபால் உறையுள் வைத்து, கமத்தொழில் அதிகாரி (ப. மு. ஆ.) கமத்தொழிற் கந்தோர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். பதிவுத் தபாலில் அனுப்பாவிட்டால் யாழ்ப்பாணம் கமத்தொழில் கந்தோருக்கு (ப. மு. ஆ.) கேள்விக்காரரோ அல்லது அவரது பிரதிநிதியோ நேரில் சென்று சீல் வைத்த உறைகளை இதற்கென வைக்கப்பட்டிருக்கும் பெட்டியில் இடுதல் வேண்டும். கேள்விப் பத்திரங்களடங்கிய தபாலுறையின் இடதுபுற மேல் மூலையில் வேலையின் பெயர்க் குறிப்பு—"

(சேவையின் பெயரும் நிலையமும் கொடுக்கப்பட வேண்டும்). ஆகிய வேலைகளுக்கான கேள்விப்பத்திரம்" என்று குறிப்பிட வேண்டும். கேள்விப் பத்திரங்களைத் திறந்து பார்த்தபின் அவை கிடைத்தமை பற்றிய உறுதிப்பத்திரங்கள் ஒவ்வொரு கேள்விக்காரருக்கும் அனுப்பப் படும். கேள்விப்பத்திரம் கோரும் முடிவுத் திகதிக்குப் பின்னர் நான்கு நாட்களுக்குள் உறுதிப்பத்திரம் கிடைக்காத கேள்விக்காரர் யாழ்ப்பாணம் கமத்தொழிற் கந்தோரில், கமத்தொழில் அதிகாரியுடன் (ப. மு. ஆ.) தொடர்பு கொள்ள வேண்டும்.

4. ஒவ்வொரு கேள்விப் பத்திரத்திற்கும் வைப்புப்பணமாகக் கட்டிப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டைக் கொடுத்து முடிவுத் திகதிக்கு முன்தினம் பகல் 12 மணி வரையும் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ள முடியும். கேள்விப்பத்திர வைப்புப் பணம் எச்செயலகங்களிலும் அல்லது கமத்தொழில் இலாகா, பேராதனையில் செலுத்துதல் வேண்டும். வேலை ஒப்பந்தம் கைச்சாத்தானதும் வைப்புப்பணம் திருப்பிக் கொடுக்கப் படும். கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட அறிவித்தல் கிடைத்த 10 நாட்களுக்குள் கேள்விக்காரர் வேலை ஒப்பந்தத்தில் கைச்சாத்திடத் தவறின் தனது கேள்விப்பத்திர வைப்புப்பணத்தை இழப்பதுடன் தாமத வேலை செய்யும் கொந்தராத்துக்காரர்களின் பட்டியலில் அவர்கள் பெயர் சேர்க்கப்படுவதுடன் இது சம்பந்தமாக எந்தவிதக் கடிதத் தொடர்பையும் அரசாங்கம் ஏற்றுக் கொள்ளமாட்டாது. தெரிவு செய்யப் பட்ட கேள்விக்காரர் பண்ணை முகாமையாளர்களினால் கொடுக்கப்படும் திகதிகளில் வேலைகளை ஆரம்பித்து குறிப்பிட்ட காலத்திற்குள் பூர்த்தியாக்கத் தவறின் ஒப்பந்தத்தில் கூறியவாறு நஷ்டஈடு செலுத்துவதற்கு ஆளாவார்.

5. கேள்விப்பத்திரகாரர் விரும்பின் கேள்விப்பத்திரங்கள் திறக்கும் நேரத்தில் பிரசன்னமாகலாம். யாழ்ப்பாணம் கமத்தொழிற் கந்தோரில் (ப. மு. ஆ.) கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். திறக்கப்படும் நேரமும் திகதியும் கேள்விப்பத்திர முடிவுத் திகதி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளன.

6. அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களில் (இரு பிரதிகளில்) அல்லது அதில் கூறப்பட்ட நிபந்தனைகளுக்கமையாத விண்ணப்பங்கள் யாவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. கேள்வித் தொகையும் மொத்தமும் மையினால் தெளிவாக எழுதப்பட வேண்டும். கேள்விப்பத்திரங்களில் அழித்து எழுதுதலும் பிழை திருத்தங்களும் கேள்விப்பத்திரக்காரரால் முதலெழுத்துக் கையொப்பமிடப்பட்டிருக்க வேண்டும்.

7. கேள்விப்பத்திரக்காரர் தமது பூரணமான பெயர், முகவரி ஆகியவற்றை பெரிய எழுத்தில் தெளிவாக எழுதுதல் வேண்டும்.

8. தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதுடன் கேள்விப்பத்திரத்தின் மொத்தத் தொகையின் 5 வீதத்தை பிணைப்பணமாகக் கமத்தொழில் அதிபரிடம் செலுத்துதல் வேண்டும். இப்பணம் கொந்தராத்து வேலையைச் சரிவரச் செய்து முடித்த பின்னரே திருப்பித்தர முடியும். தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரக்காரர் வேலையைச் சரிவரச் செய்து முடிக்காவிடின் அவருடைய பிணைப்பணம் அரசாங்கத்தைச் சேருவதுடன் அவருடைய பெயர் கொந்தராத்துக்காரர்களின் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டு தாமத வேலை செய்யும் கொந்தராத்துக்காரரின் பட்டியலில் சேர்க்கப்படும்.

9. ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் பொழுது ஒப்பந்தப் பத்திரத்தில் ஒட்டப்படும் முத்திரைக்கான செலவைக் கேள்விப்பத்திரக்காரர் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

10. கொந்தராத்துக்காரர் தமது வேலையைத் திருப்திகரமாகச் செய்யாமலோ குறிப்பிட்ட தினத்திற்குள் பூர்த்தியாக்காமல் இருந்தாலோ அவரது கொந்தராத்தை முடிவுறச் செய்யும் அதிகாரம் கமத்தொழில் அதிபருக்குண்டு. இப்படியான சந்தர்ப்பத்தில் கொந்தராத்துக்காரரின் செலவில் அவ்வேலையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு வேறுவித ஒழுங்குகள் செய்வதற்குக் கமத்தொழில் அதிபர் உரிமையுடையவராவார்.

11. கொந்தராத்துக்காரர் கோரும் கேள்விகள் முழுதையுமோ சில பகுதிகளையோ அனுமதிக்கவும் நிராகரிக்கவும் அரசாங்கத்திற்கு உரிமையுண்டு.

12. கேள்விப்பத்திரக்காரர் கேள்விகள் முடிவு திகதியில் இருந்து மூன்று கிழமையை கேள்விப்பத்திரங்கள் பரிசீலனை செய்து ஏற்றுக் கொள்ளும் தினமாக வைத்திருத்தல் வேண்டும்.

13. தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரக்காரர் பயிற்றப்பட்ட/பயிற்டப்படாத இலங்கையரையே வேலைக்கமர்த்துதல் வேண்டும். கூடியவரை வேலை நடைபெறும் பிரதேசங்களில் இருந்தே கூலியாட்களை வேலைக் கமர்த்துதல் வேண்டும்.

இந்நிபந்தனைகளுள் ஏதாவது ஒன்றுக்கு அமையாது வேலை செய்யும் கேள்விப்பத்திரக்காரர் கொந்தராத்து வேலை நிராகரிக்கப்படுவதற்கு ஆளாவார். விசேட சூழ்நிலையில் கமத்தொழில் உணவுற்பத்தி மந்திரியின் எழுத்துமூல அங்கீகாரத்தைப் பெற்றிருந்தால் மாத்திரமே இலங்கையரல்லாத ஒருவரை வேலைக்கமர்த்த முடியும்.

எழுத்து மூலம் அங்கீகாரம் பெறுது இலங்கையரல்லாத ஒருவரை வேலைக்கமர்த்துவது அவரது கொந்தராத்து வேலையை இழப்பதற்கு வழிகோலும்.

" இலங்கையர் " என்னும் பதம் இலங்கையின் வம்சாவழியினரை அல்லது பதிவு செய்யப்பட்ட ஒருவரைக் குறிக்கும்.

அமைய ஊழியர்களின் தற்போதைய அல்லது வருங்காலத்தில் செய்யப்படும் சம்பளச்சட்ட திட்டங்களுக்கமைய இக்கொந்தராத்தில் வேலை பார்க்கும் கூலியாட்களின் சம்பளங்கள் நிர்ணயிக்கப்படல் வேண்டும். கமத்தொழில் அதிபரினால் அங்கிகரிக்கப்பட்ட கமத்தொழில் இலாகாவில் வேலைபார்க்கும் ஓர் உத்தியோகத்தர் கொந்தராத்துக்காரரின் வேலை சம்பந்தமான புத்தகங்கள், சம்பளப்பட்டியல், வரவுப் பட்டியல் ஆகிய தஸ்தாவேஜுகளைப் பார்வையிடுவதற்குக் கோரப்படுவர்.

14. எல்லா அறிவித்தல்களும் கேள்விப்பத்திரக்காரருக்கு நேரடியாக அல்லது தபால் மூலம் அனுப்பப்பட்டால், அது அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படும்.

15. 1934 ம் ஆண்டு தொழிலாளர் நலவுரிமைச் சட்ட இல. 19 (பகுதி 117) இன் கீழ் தொழிலாளரினால் செய்யப்படும் அரசாங்கத்தைப் பாதிக்கும் முறைப்பாடுகளுக்கு கொந்தராத்துக்காரரே பொறுப்புடையவராவார்.

16. விரும்பத்தகாதவரை வேலைக்கமர்த்துவதை எதிர்ப்பதற்கு அரசாங்கத்துக்கு உரிமையுண்டு.

17. குற்றப்பட்ட கொந்தராத்துக்காரர்கள் தனித்தோ அல்லது கூட்டாகவோ கேள்விப்பத்திரங்கள் கோரின் அவர்களுடன் கமத்தொழில் அதிபர் விரும்பாவிடின் ஒப்பந்தம் செய்து கொள்ளமாட்டார்.

18. மேலும் விவரங்கள் தேவைப்படின் ஒவ்வொரு பண்ணைகளுக்குமுரிய அதிபர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

எம். எல். வி. இலங்ககோன்,
பிரதிக் கமத்தொழில் அத்தியட்சகர்.

பேராதனை,
1970 ம் ஆடு ஒக்தோபர் மீ 10 ந் உ.

10-726—23.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,929

## தபால் தந்தித் தொலைபேசித் திணைக்களம்

### விசேட கடித உறைகள் வழங்கலுக்கான கேள்விப்பத்திரங்கள்

விசேட கடித உறைகள் வழங்கலுக்கான கேள்விப்பத்திரங்கள், கொழும்பு 1, தபாற் தந்தித் தலைமை அலுவலகத்திலுள்ள பெரும் பாகக் கேள்விப்பத்திரச் சபைத் தலைவரால் 1970 நவம்பர் 5 ம் திகதி மு. ப. 10.00 மணி வரை உள்நாட்டு உற்பத்தியாளர்களிடமிருந்து ஏற்றுக்கொள்ளப்படும்.

2. 1970 நவம்பர் 5 ம் திகதி மு. ப. 10.00 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விப்பத்திரதாரர்கள், கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் போது சமுகமளிக்க அனுமதிக்கப்படுவர். கொழும்பு 5, நாராஹேன்பிட்டியிலுள்ள உதவி அத்தியட்சகர் (உபகரணம், கட்டடம், நலன்புரி சேவை, களஞ்சியம்) அலுவலகத்திலிருந்து பெறப்படும் பத்திரங்களிலேயே கேள்விப்பத்திரங்கள் அனுப்புதல் வேண்டும். மேலதிக விபரங்கள் மேற்குறிப்பிட்ட அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம். கொழும்பு 1, பிரதம அஞ்சல் அலுவலகத்திலுள்ள 4 ம் இலக்க கருமபீடத்தில் வைப்புப்பணமாகக் கட்டும் ரூபா 50/- க்குரிய பற்றுச்சீட்டைக் கொடுத்து 1970 ஒக்டோபர் 23 ம் திகதியிலிருந்து 1970 நவம்பர் 4 ம் திகதி பி. ப. 4.30 மணி வரை கேள்விப்பத்திர சாதனங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

3. மூலப் பொருள்கள் இறக்குமதி செய்வதற்கு அனுமதிப்பத்திரங்கள் கேட்காத கொந்தராத்துக்காரர்களிடமிருந்தே கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். இது சம்பந்தமாக எதுவிதமான இறக்குமதி அனுமதிப்பத்திரங்கள் பெறுவதற்கும் இத்திணைக்களம் அத்தாட்சிப்படுத்தமாட்டாது.

எம். பீ. த சில்வா,
உதவி அஞ்சல் அதிபர் நாயகம்,
(அஞ்சல் சேவைகள்).

அஞ்சல் பிரிவு,
அஞ்சல் தந்தித் தலைமை அலுவலகம்,
கொழும்பு 1.

10–865—23.10.1970 ந் திகதிய வர்த்தமானி இல. 14,929

---

## உணவுப் பகுதி

### பாவனைக்குகந்ததல்லாத சணற் சாக்குகள் கொள்வனவு செய்வதற்கான கோரிக்கைகள்

சாமேஸ் களஞ்சியத்திலிருக்கும் சுமார் 52,495 சணற் சாக்குகள் கொள்வனவு செய்வதற்கான கோரிக்கைகள் 7.11.1970 சனிக்கிழமை பி. ப. 2.30 மணிவரை 330, யூனியன் பிளேஸ், கொழும்பிலுள்ள உணவுக் காரியாலயத்தின் கோரிக்கைச் சபைத் தலைவரால் ஏற்றுக் கொள்ளப்படும்.

கோரிக்கைகள் ரூபா 500/- கட்டி இவ்வலுவலகத்திலிருந்து பெறும் பத்திரத்திலேயே விண்ணப்பிக்கவேண்டும். இக்கோரிக்கைகள் பற்றிய மேலதிக விபரங்கள் இவ்வலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பொ. நடராசா,
உணவு அதிகாரிக்காக.

330, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 2,
1970 ம் ஆண்டு ஒக்ரோபர் மீ 16 ந உ.

10–863—23.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,929

---

# பொருட்கள் விற்பனையும் பிறவும்

## பொலிஸ் அலுவலகம்

### ஏல விற்பனை

உபயோகிக்க இயலாத பொலிஸ் உத்தியோக உடைகள், மற்றும் பொருட்கள் 1970 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 28 ம் திகதி புதன் கிழமை முற்பகல் 10 மணியளவில் கண்டி பொலிஸ் நிலைய பண்டக சாலையில் விற்பனை செய்யப்படும்.

பின்வரும் பொருட்களும் இவ்விற்பனையில் அடங்கும் :—

| | |
|---|---|
| (1) அலுமாரி | 1 |
| (2) பொயிலர் அடுப்பு | 3 |
| (3) வாங்குகள் | 24 |
| (4) பட்டன் பொல்லுகள் | 90 |
| (5) பணப்பெட்டி | 1 |
| (6) கைபிடிக் கதிரைகள் | 3 |
| (7) சாதாரண கதிரைகள் | 7 |
| (8) மண்ணெண்ணெய் அடுப்பு | 1 |
| (9) நெருப்பணைக்கும் கருவி | 1 |
| (10) செடிவெட்டும் கத்தரிக்கோல் | 1 |
| (11) ஆஸ்பத்திரிநிறுத்தும் கவுண்டர் | 1 |
| (12) உடுப்பு ருக்கை | 21 |
| (13) உடைப்பெட்டிகள் | 5 |
| (14) புல்வெட்டும் கருவி | 2 |
| (15) தும்புமெத்தைகள் | 114 |
| (16) பூட்டுக்கள் | 29 |
| (17) சமையல் யந்திரம் | 9 |
| (18) சைரன் (கை) | 1 |
| (19) முக்காலிகள் | 9 |
| (20) நிறுத்தும் கடிகாரம் | 1 |
| (21) பெரிய மேசை | 2 |
| (22) சிறிய மேசை | 2 |
| (23) மரத்தட்டுக்கள் | 4 |
| (24) ரோஸ்டல் மைதாங்கி | 10 |
| (25) மேசை மணிக்கூடு | 1 |
| (26) தொப்பிகள் | 3 |
| (27) பிரஷ்கள் | 13 |
| (28) கன்வஸ் சப்பாத்துக்கள் | 30 |
| (29) பைசிக்கள் போக் | 1 |
| (30) பைசிக்கள் கொக்வில் | 1 |
| (31) பைசிக்கள் சாமான்தூக்கு | 1 |
| (32) பைசிக்கள் இருக்கை (சீற்) | 3 |
| (33) காக்கி உடை (டியூனிக்) | 28 |
| (34) காக்கி புஷ்கோட்டுக்கள் | 4 |
| (35) காக்கி கால்சட்டைகள் | 32 |
| (36) தோல்பட்டிகள் | 20 |
| (37) குண்டுப்பைகள் | 21 |
| (38) பூட்ஸ் சோடிகள் | 100 |
| (39) பீக் தொப்பிகள் | 1 |
| (40) கால் சுற்றும் பட்டிகள் | 60 |
| (41) கறுப்பு மழைக் கோட்டு | 3 |
| (42) காக்கி மழைக்கோட்டு | 4 |
| (43) இறப்பர் மழைக்கோட்டு | 3 |
| (44) சிலவ் தொப்பிகள் | 100 |
| (45) உடுப்புப்பைகள் | 37 |
| (46) நீல கால்மேஸ்சோடிகள் | 10 |
| (47) சப்பாத்துச் சோடிகள் | 300 |
| (48) அளக்கும் நாடா | 1 |
| (49) மேசைக்கரண்டிகள் | 6 |
| (50) மேசைக்கத்திகள் | 2 |
| (51) சுவர்க்கடிகாரம் | 1 |

மேற்கூறிய பொருட்கள் ஏல விற்பனைக்கு முன் முதல் நாள் கண்டி பொலிஸ் நிலையத்தில் பார்வையிடலாம். விற்பனை முடிந்தவுடன் பணத்தைச் செலுத்திப்பொருட்களை அப்புறப்படுத்தல் வேண்டும்.

எம். ஆர். குணரட்ண,
பொலிஸ் அத்தியட்சகர்,
மத்திய மாகாணம் (வடக்கு).

பொலிஸ் அலுவலகம்,
கண்டி,
1970 ம் ஆண்டு ஒக்டோபர் மீ 5 ந உ.

10–723—23.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,929

---

## அரசாங்க விநியோகத் திணைக்களம்

### ஏலவிற்பனை

*1970 ம் ஆண்டு நவம்பர் மாதம் 4 ம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொழும்பு 2 சேர் சிற்றம்பலம் கார்டினர் மாவத்தையிலுள்ள அரசாங்க விநியோகத் திணைக்களத்தில் நல்ல முறையில் பாவிக்கப்பட்ட 24 மோட்டார் வாகனங்களளவில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும். இவ்வாகனங்களை மேற்கூறிய நிலையத்தில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். மேலதிக விபரங்களை அரசாங்க விநியோகப் பணிப்பாளர் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.*

எஸ். ஏ. பீ. ரூபசிங்க,
அரசாங்க விநியோகப் பணிப்பாளர்.

*கொழும்பு, 23 ஒக்டோபர் 1970.*

*10-720—23.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,929*

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறைநாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதிநாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கவிரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அழுத்தகர் திணைக்களத்திற்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.

### அட்டவணை—1970

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|
| ஒற்ரோபர் | 2.10.70 | வெள்ளி | 25. 9.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 9.10.70 | வெள்ளி | 2.10.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 16.10.70 | வெள்ளி | 9.10.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 23.10.70 | வெள்ளி | 16.10.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 30.10.70 | வெள்ளி | 23.10 70 | வெள்ளி | பி.ப. | 3 30 |
| நவெம்பர் | 5 11 70 | வியாழன் | 30 10 70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 12.11.70 | வியாழன் | 5.11.70 | வியாழன் | ந.ப. | 12.00 |
| | 20.11.70 | வெள்ளி | 12.11.70 | வியாழன் | ந.ப. | 12.00 |
| | 27.11.70 | வெள்ளி | 20.11.70 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| திசெம்பர் | 4.12.70 | வெள்ளி | 27.11.70 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| | 11.12.70 | வெள்ளி | 4.12.70 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| | 18.12.70 | வெள்ளி | 10.12.70 | வியாழன் | பி.ப. | 3.30 |
| | 24 12.70 | வியாழன் | 17.12.70 | வியாழன் | பி.ப. | 3.30 |
| | 31.12.70 | வியாழன் | 24.12.70 | வியாழன் | பி.ப. | 3.30 |

அரசாங்க அழுத்தகர் திணைக்களம்,
கொழும்பு,
1970 ஆம் ௵ யூன் ௴ 2 ௳.

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
அரசாங்க அழுத்தகர்.

இலங்கை அரசாங்க அழுத்தகர் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.